29TH DECEMBER 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 95 | பக்கங்கள் - 18 | editor.uthayam@gmail.com


## லதா வல்பொல இறுதிக் கிரியைகள் சுதந்திர சதுக்கத்தில்

மறைந்த பழம்பெரும் பாடகி லதா வல்பொலவின்



02ம் பக்கம்பார்க்க...

# முஸ்லிம் திணைக்கள காணி விவகாரம் ஜனாதிபதியுடன் பேசி தீர்வுக்கு முயற்சி

## பிரதியமைச்சர் முனீர் முலப்பர் நம்பிக்கை



கொழும்பு டீ.ஆர்.விஜயவர்தன மாவத்தையில் இயங்கி வரும் முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களம் அமைந்துள்ள காணி தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை நிலை குறித்து ஜனாதிபதியின்நேரடி கவனத்துக்குக்கொண்டு வரவுள்ளதாக சமய விவகார கலாச்சார பிரதியமைச்சர் அஷ்ஷெய்க் முனீர் முலப்பர் தெரிவித்தார்.

இக்கட்டடம் தொடர்பாக கட்டிடம் தொடர்பாக கட்டிடத்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புத்தசாசன அமைச்சின் மேலதிக செயலாளர் கொழும்பு மாவட்ட பிரதேச செயலாளருக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாக கேட்ட போதே பிரதியமைச்சர் முனீர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் காணி சுவீகரிப்புத் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்து இப்பிரச்சினைக்குத் தீர்வுக்கான நடவடிக்கை எடப்பதாகவும் பிரதியமைச்சர் முனீர்

02ம் பக்கம்பார்க்க...

## பொலிஸ் திணைக்களத்துக்கு 325,000 பலூன்கள் இறக்குமதி

மதுபோதையில் வாகனம் ஓட்டபவர்களைக் கண்டுபிடிப்பதற்காக 75,000 பலூன்களை பொலிஸ் திணைக்களம் தருவித்துள்ளதாக போக்குவரத்து பொலிஸ் திணைக்களப் பணிப்பாளர் மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக இத்தொகை வந்திருப்பதாகவும் இன்னும் 250,000 பலூன்கள் ஜனவரி மாதத்தில் கிடைக்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக பொலிஸ் நிலையங்களில் பலூன்களூக்குப் பற்றாக்குறை இருப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்தே பொலிஸ் திணைக்களம் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வதந்திகளை நம்ப வேண்டாம் கார்ல்டன் தான் எனது வீடு

### மஹிந்த ராஜபக்ஷ



தனது கிராமத்தை விட்டு வெளியேறி கொழும்புக்கு திரும்பும் எண்ணம் தனக்கு இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மீண்டும்

02ம் பக்கம்பார்க்க...

## டக்ளஸுக்கு ஜனவரி 9 வரை விளக்கமறியல்



கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும்

02ம் பக்கம்பார்க்க...

## மீண்டும் உருவாகும் காற்றுச் சுழற்சி தயார் நிலையில் அனர்த்த முகாமைத்துவம்

இன்று (29) முதல் இலங்கையை சூழ நிலவக்கூடிய அலை வடிவான காற்று காரணமாக மழையுடனான வானிலை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் நாட்களில் ஏற்படக்கூடிய மழையுடனான வானிலையை எதிர்கொள்வதற்காக அனர்த்த

03ம் பக்கம்பார்க்க...

## பக்கச் சார்பற்ற விசாரணைக்கு இஸ்ரேல் அனுமதி வழங்க வேண்டும்

### 47 பக்க ஹமாஸின் ஆவணத்தில் வலியுறுத்து

ஒக்டோபர் 7, 2023 அன்று நடந்த தாக்குதல்களைத் தொடர்ந்து காசா மீது நடைபெற்ற போரின் விளைவுகள் குறித்து உலகளவில் கடும் விவாதங்கள்

05ம் பக்கம்பார்க்க...

## கொழும்பு மாநகர சபை பட்ஜெட் 31ல் மீண்டும் சமர்ப்பிப்பு



கொழும்பு மாநகரசபையின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட தயாரிப்பு செயல்முறை குறித்து மாநகர மேயர் வரை காலி பால்தசார் விளக்கமளித்துள்ளார்.

டிசம்பர் 22 அன்று சபை வாக்கெடுப்பில் தோல்வியடைந்த இந்த வரவு செலவு திட்டம், டிசம்பர்

03ம் பக்கம்பார்க்க...

## இளம் பராயத்தினரின் உணவு விடயத்தில் பெற்றோர் குறைவான அக்கறை

### ஆய்வொன்றில் வெளியாகியுள்ள பல்வேறு தகவல்கள்

அரசப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் குறைந்த விலையில் கிடைக்கும் மற்றும் குறைந்த ஊட்டச்சத்து மதிப்புள்ள சிற்றுண்டிகளையே அதிகம் சாப்பிட விரும்புவதாக தெரியவந்துள்ளது.

நிறுவனம் ஒன்று,

03ம் பக்கம்பார்க்க...

## இலட்சக் கணக்கான மக்களின் வரவேற்புடன் நாடு திரும்பிய தாரிக் றஹ்மான்



“பங்களாதேஷானது முஸ்லிம்கள், இந்துக்கள், பௌத்தர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் என அனைவருக்கும் சொந்தமானது.”

- இவ்வாறு பங்களா தேஷின் முன்னாள்

05ம் பக்கம்பார்க்க...

## ஊடக சுதந்திரத்தை நசுக்க அரசு முயற்சி

### – சார்க் ஊடகவியலாளர் பேரவை கண்டனம் –

இலங்கை அரசாங்கம் காவல்துறையினரின் அச்சுறுத்தல்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் கருத்துச் சுதந்திரத்தை நசுக்க முயற்சிப்பதையும், ஊடக

05ம் பக்கம்பார்க்க...


அமானா வங்கியில் வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## அனர்த்தங்கள்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தெரிவித்தார்.

கொழும்பு பிரதேச செயலாளருக்கு புத்தசாசன, சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிர்வாகப் பிரிவிற்கு பொறுப்பான மேலதிக செயலாளர் எம். நாலிகா பீ குனரத்ன அண்மையில் எழுதிய கடிதத்தின் ஊடாகவே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் திணைக்களத்தின் கீழுள்ள இந்தக் காணியினை அமைச்சிற்கு மாற்றுவதற்காக சிரேஷ்ட நில அளவையாளரினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் முன்னேற்றத்தை சமர்ப்பிக்குமாறும் குறித்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இந்த கடிதத்தின் பிரதிகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் சிரேஷ்ட நில அளவையாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அமைச்சரவையினால் 2021.03.16ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரமே இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகவும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சும் அதன் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் தற்போது பல இடங்களில் நடாத்திச் செல்கின்றமையினால் அமைச்சையும் இந்த நிறுவனங்களையும் ஒரே கட்டடத்தில் தாபிக்கும் தேவையின் பொருட்டு கொழும்பு - 10, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் சார்பில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் ஒன்பது மாடிகளைக் கொண்ட கட்டடம் மற்றும் அது அமைந்துள்ள காணியை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு உடைமையாக்கிக் கொள்வதற்கும் அதன் பின்னர் நிர்மாணிப்பு பணிகளை பூர்த்தி செய்து அமைச்சையும் அதன் கீழான சகல நிறுவனங்களையும் இந்த கட்டடத்தில் தாபிப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக குறித்த அமைச்சரவை தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரம் அப்போதைய புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராக செயற்பட்ட மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பாக புத்தசாசன, சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டப்ளியூ. பிரின்ஸ் சேனாதிரவை தொடர்புகொண்டு வினவிய போது, அவர் கருத்துக் கூற மறுத்துவிட்டார்.

இதேவேளை, குறித்த விடயம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வுடைய அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்டது எனவும் இந்தப் பணியினை தற்காலிகமாக நிறுத்துமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாக சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் தெரிவித்தார்.

இந்த விடயம் அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால் குறித்த விடயம் தொடர்பில் அமைச்சரவையில் விரிவாக கலந்துரையாடப்பட வேண்டியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால், புத்தசாசன, சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவியுடன் இது தொடர்பாக விரைவில் கலந்துரையாடவுள்ளேன் என பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் ஆட்சியில் புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான இந்தக் காணி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக மாற்றப்பட்டுள்ளது.

இதற்காக அக்காலப் பகுதியில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக இருந்த லக்ஷ்மன் ஜயகொடி, சிறிமத் அதுலத்முதலி, எம்.எச். எம். அஷ்ரப் மற்றும் ஏ.எச். எம். பௌசி போன்றோர் கடும்பாடுபட்டுள்ளனர்.

மீண்டும் இக்காணி புகையிரத திணைக்களத்திற்கு மாற்றப்பட்டு தற்போது கொழும்பு பிரதேச செயலாளரின் கீழ் காணப்படுகின்றது. இக்காணியில் 9 மாடிகளைக் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் 2006ஆம் ஆண்டு அப்போதைய சமய விவகார பிரதி அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவினால் அடிக்கல் நடப்பட்டது.

இந்த கட்டிடத் தொகுதியின் முதல் மூன்று மாடிகளுக்கான நிதி சவூதி நிதியத்தினால் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத இந்த கட்டிடத் தொகுதி 2017ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்துவைக்கப்பட்டது.

## பிரபல...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*இறுதிக்கிரியை தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*இதற்கமைய அவரது இறுதிக்கிரியைகள் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அன்னாரது உடல் இன்று பிற்பகல் 3 மணி முதல் இரவு 10 மணிவரை கொழும்பில் உள்ள தனியார் மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படுகின்றது.*

*பின்னர் சுதந்திர சதுக்க வளாகத்தில் அன்னாரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டதன் பின்னர், பொரளை பொதுமயானத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

## வதந்திகளை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*குடியேறியுள்ளதாக பரவும் வதந்தி குறித்து தென்னிலங்கை ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.*

*கொழும்பில் வாடகை வீட்டில் தங்கியுள்ளதாக பரவும் தகவல்! மகிந்த வெளியிட்ட விளக்கம் மீண்டும் தான் கொழும்புக்குத் திரும்புவதாக பரவும் வதந்தி குறித்து சிலர் விசாரிப்பதாகவும், கொழும்புக்கு திரும்பப்போவதில்லை என்பது மட்டுமே தனது கருத்து என்றும் மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.*

*இதேவேளை, மகிந்த ராஜபக்ச நுகேகொடை பகுதியில் தனது நண்பரின் வீட்டில் தங்கியுள்ளதாகவும், அரசாங்கத்திற்கு பயப்படாமல் ராஜபக்ச குடும்பம் யார் என்பதை அறிந்த நண்பர் தங்களுக்கு வீட்டினை வழங்கியதாகவும் நாமல் விளக்கமளித்திருந்தார்.*

*மகிந்த தற்போது கொழும்புக்கு வந்திருந்தாலும், தங்காலை கார்ல்டன் இல்லத்திலும், கொழும்பில் உள்ள நுகேகொடை இல்லத்திலும் மாறி மாறி தங்குவார் என்றும் நாமல் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## டக்ளஸ்க்கு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*கம்பஹா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த 26ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் அவர் கைது செய்யப்பட்டார்.*

*2001ஆம் ஆண்டு அவரது தனிப்பட்ட பாவனைக்காக இராணுவத்தினால் வழங்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, 2019ஆம் ஆண்டு திட்டமிட்ட குற்றவாளியான மாகந்துர மதூஷிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கண்டெடுக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளுக்காகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மதூஷிடம் இருந்து மீட்கப்பட்ட அந்தத் துப்பாக்கியின் இலக்கங்களைச் சோதித்தபோது, அது டக்ளஸ் தேவானந்தாவிற்கு வழங்கப்பட்ட துப்பாக்கி என்பது தெரியவந்துள்ளது.*

*இது தொடர்பில் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, குறித்த துப்பாக்கி எவ்வாறு காணாமல் போனது என்பது குறித்து தெளிவுபடுத்தத் தவறியமையினாலேயே அவர் கைது செய்யப்பட்டார்.*

*கைது செய்யப்பட்ட அவர் 72 மணிநேர தடுப்புக்காவல் உத்தரவில் விசாரிக்கப்பட்ட நிலையில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*



## மீண்டும்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முகாமைத்துவப் பிரிவுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பிற்கான மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு தயார்நிலையில் இருப்பதாக, அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், இதனைக் கருத்திற்கொண்டு, கடற்படை வீரர்கள், உலங்கு வானூர்திகள், மற்றும் படகுகளைத் தயார் நிலையில் வைக்குமாறு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மீண்டும் இலங்கையை சூழும் அலை வடிவக் காற்று.. தயார் நிலையில் அதிகாரிகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் சம்பத் கொட்டுவேகொட இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் அவர், எதிர்பார்க்கப்படும் இந்த வானிலை மாற்றத்தின் போது, வடக்கு, வடமத்திய, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் தற்போது நிலவும் மழையுடனான வானிலையைக் காட்டிலும் சீரற்ற வானிலை நிலவக்கூடும் எனவும் எச்சரித்துள்ளார்.

அதன்படி ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் குறித்து அவதானம் செலுத்தி, அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் வலியுறுத்தியுள்ளார்.

## கொழும்பு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

31 அன்று இரண்டாவது வாசிப்பிற்காக மீண்டும் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி திட்டம்

இந்த திட்டம் வெறும் எண்களின் தொகுப்பு அல்ல மாநகரசபையின் செயல்திறனையும் எதிர்வரும் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டங்களையும் பிரதிபலிப்பதாக மேயர் தெரிவித்துள்ளார்.

2023/24 காலப்பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை இல்லாமல் ஆணையாளர் முறையில் நிர்வாகம் நடந்ததால், வரவு செலவுத் திட்ட தயாரிப்பு சிக்கலானதாக இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, புதிய சபை நியமிக்கப்பட்ட சில வாரங்களுக்குள் திட்ட தயாரிப்பு தொடங்கப்பட்டு, ஜூலை மாதத்தில் 16 மாநகர நிறுவனங்களிடமும், ஆளும் தரப்பு மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடமும் முன்மொழிவுகள் கோரப்பட்டன.

அவை, அரசியல் பேதமின்றி அவை பொதுநலன் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டன. முதல் முறையாக மாநகர ஊழியர்களிடமிருந்தும் எழுத்து மூல முன்மொழிவுகள் பெறப்பட்டன. நிதி சாத்தியக்கூறுகள் மற்றும் செலவுத் தேவைகள் குறித்து நவம்பர் வரை கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

பின்னர் 23 நிலைக் குழுக்கள், நிதிக் குழுக்கள் ஆகியவற்றின் பரிசீலனையுடன், சட்டப்படி பொதுமக்கள் பார்வைக்காகவும் வரவு செலவுத் திட்டம் வெளியிடப்பட்டது.

எனினும், 2025, டிசம்பர் 22 அன்று ஒப்புதல் பெறத் தவறிய குறித்த வரவு செலவு திட்டம், டிசம்பர் 31 அன்று மீண்டும் பரிசீலிக்கப்பட உள்ளது. ஆரம்ப தோல்வியினையும் மீறி, கொழும்பு மக்களுக்கு மேம்பட்ட வாழ்க்கைத் தரமும் வளமான நகரமும் உருவாக்குவது தமது இலக்காகத் தொடரும் என மேயர் உறுதியளித்துள்ளார்.

## இளம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இலங்கையில் நகர்ப்புற இளம் பருவத்தினரிடையே ஆரோக்கியமான உணவுப் பழக்கத்திற்குத் தேவையான உணவு நுகர்வு முறைகள், விருப்பங்கள், தடைகள் மற்றும் செயல்பாடுகள் என்ற தலைப்பில் ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி மாவட்டங்களில் உள்ள அரச மற்றும் தனியார் பாடசாலைகளை சேர்ந்த 463 குழந்தைகளிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

**மாணவர்களின் போக்கு**

அரசப் பாடசாலைகளில் பயிலும் குழந்தைகள், குறைந்த விலையில் கிடைக்கும் சிற்றுண்டிகளையே அதிகம் சாப்பிட விரும்புவதாகவும், குறித்த இளம் பருவத்தினரின் முக்கிய உணவு அரிசி மற்றும் மாவு சார்ந்த உணவுகளை அடிப்படையாகக் கொண்டது என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

மேலும், காய்கறிகள், பருப்பு வகைகள் மற்றும் தானியங்களின் தினசரி நுகர்வு குறைவாக உள்ள அதே நேரத்தில் துரித உணவு, சிற்றுண்டி மற்றும் சர்க்கரை பானங்களின் நுகர்வு அதிகரித்து வருகிறது.

படிப்பில் பாதிக்கும்

மேற்பட்ட மாணவர்கள் கல்வி நடவடிக்கைகள், குறிப்பாக காலை உணவு காரணமாக பிளியாகவோ அல்லது உணவில் ஆர்வமின்மை காரணமாகவோ உணவைத் தவிர்ப்பது தெரியவந்துள்ளது.

படித்த மாணவர்களில் கிட்டத்தட்ட 80வீதம் பேர் அதிகமாக சிற்றுண்டி சாப்பிடும் போக்கைக் காட்டியுள்ளனர்.

மேலும், அரசப் பாடசாலைகளில் படிக்கும் பெரும்பாலான மாணவர்கள் தனியார் பாடசாலை மாணவர்களுடன் ஒப்பிடும்போது உடல் ரீதியாக குறைவாகவே செயல்படுகிறார்கள், கூடுதல் வகுப்புகள் மற்றும் பரபரப்பான சூழ்நிலையே இதற்கு முக்கிய காரணங்கள்.

இளம் பருவத்தினரின் உணவுப் பழக்கவழக்கங்கள் குறித்து பெற்றோர்கள் குறைவாகவே அக்கறை கொண்டுள்ளனர் என்பதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

சமூக ஊடகங்கள் மற்றும் சகாக்களின் அழுத்தம் ஆகியவை குழந்தைகளின் உணவுப் பழக்கத்தையும் பாதித்துள்ளன என்பதையும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அவிபிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்







www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 DECEMBER 29 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# சகலருக்கும் முன்மாதிரியான ஹக்கீம் அதாஉல்லா அனர்த்த கூட்டு

சூறாவளி மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்ற கம்பளை கெலிஓயா பிரதேசங்களில் நிவாரண பணிகளை மேற்கொள்வதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மற்றும் தேசிய மக்கள் காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா பாராளுமன்ற உறுப்பினர் எம் எல் ஏ எம் ஹிஸ்புல்லா உட்பட அரசியல் பிரமுகர்கள் ஒன்றிணைந்து செயல்படுவது முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் பேசுபொருளாகியுள்ளது.

அக்கரைப்பற்று மற்றும் காத்தான்குடி உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான கனரக ஊர்திகளை எடுத்துச் சென்று பாதிக்கப்பட்ட பிரதேசங்களை சுத்திகரிக்கும் நடவடிக்கைகளுக்கு அவர்கள் ஆற்றி வரும் பங்களிப்பு சகல தரப்பினரதும் பாராட்டினை பெற்று வருகிறது. இந்த செயற்பாட்டை சிலர் அரசியல் ரீதியாக விமர்சிப்பது கவலைக்குரியது.

சமூகத்தில் உலமாக்கள் புத்திஜீவிகள் சமூகத்தின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் இந்த செயற்பாட்டை பாராட்டி வரும் நிலையில் சிலர் இதை மோசமான நிலையில் விமர்சித்து வருகின்றனர்.

இந்த இணைப்பினை அரசியலுக்கு அப்பால் இருந்து பார்ப்பதே சிறந்தது. தேர்தல் காலங்களில் விமர்சிப்பதை போன்று ஹக்கீம் அதாவுல்லா இணைப்பினை அரசியல் மயமாக்கி சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை பகிர்ந்து வருவது கவலைக்குரியது. இது அதற்கான நேரம் அல்ல என்பதை நினைவூட்ட விரும்புகிறோம். கம்பளை கெலிஓய பிரதேசங்களில் மக்கள் மிக மோசமாக பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர். பல உயிர் சேதங்களும் இடம்பெற்றுள்ளன. கம்பளை நகர் உட்பட்ட பல பிரதேசங்களில் இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு பலமாதங்கள் ஆகலாம் என்றிருக்கும் இந்நிலையில் இருமுனைகளிலிருந்து செயல்பட்டு வரும் அதாவுல்லா ரவூப் ஹக்கீம் போன்ற தலைவர்கள், மத்திய மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை பகிர்ந்தளிப்பதற்கு ஒன்று சேர்ந்திருப்பதானது பாராட்டுக்குரியது.

மக்கள் தமது அடுத்த வேளை சாப்பாட்டுக்கும், அன்றாட வாழ்வாதாரத்துக்கும் போராடிக் கொண்டிருக்கும் இத்தருணமானது அரசியலுக்கான நேரமல்ல. அரசியல் நிலைப்பாடுகள் வேறு ஆபத்தில் கை கொடுத்து உதவுவது என்பது வேறு என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். கடந்த கால செயற்பாடுகளை பற்றி விமர்சிப்பதில் இருந்து தவிர்ந்து, பல பாடங்களை கற்றுத் தந்துள்ள இவ் அனர்த்தத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர் வாழ்வளித்து அவர்களது வாழ்க்கையை கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாடு நம் எல்லோருக்கும் உண்டு என்பதை உணர்ந்து செயல்படுவதே சால சிறந்தது.

## ஈரானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரத்திற்குத் தடையாக இருப்பதையும் வன்மையாகக் கண்டிப்பதாக சார்க் ஊடகவியலாளர் பேரவை (SAARC Journalists Forum) தலைவர் ராஜூ லாமா தெரிவித்துள்ளார்.

சார்க் ஊடகவியலாளர் பேரவையின் (SJF) மத்திய செயற்குழு இன்று (26) விடுத்துள்ள விசேட அறிக்கையில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கஞ்சா செடி சுற்றிவளைப்பு தொடர்பாக 'ஹிரு' ஊடக வலையமைப்பு அண்மையில் வெளியிட்ட செய்தி குறித்து காவல்துறையினர் விடுத்த கோரிக்கை, சுதந்திரமான ஊடகவியலின் மீது தொடுக்கப்பட்ட நேரடித் தாக்குதல் என ராஜூ லாமா சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 15 மாத காலப்பகுதியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஊடகங்களை ஒடுக்குவதில் ஒரு கவலைக்குரிய போக்கை வெளிப்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதாக உறுதியளித்த போதிலும், தற்போது அரசாங்கம் 'சர்வாதிகாரப் போக்கை' நோக்கி நகர்வதாகவும் சார்க் சங்கம் விமர்சித்துள்ளது.

காவல்துறை உத்திகளைப் பயன்படுத்தி விமர்சகர்களை மௌனமாக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

ஊடகவியலாளர்களின் அரசியலமைப்பு ரீதியான உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்.

ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக ஒழுக்கநெறிகள் தொடர்பான சர்வதேச தரங்களைப் பேண வேண்டும்.

மேலும், இலங்கையில் ஊடகத் துறைக்குள் அரசாங்கம் முன்னெடுக்கும் தலையீடுகளுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுக்குமாறு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கும், கருத்துச் சுதந்திரத்திற்காகப் போராடுபவர்களுக்கும் சார்க் ஊடகவியலாளர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.



# மண்சரிவு பாதிப்புகளைப் பார்வையிட மு.கா.தலைவர் ஹக்கீம் மீண்டும் விஜயம்!

அண்மையில் நிலவிய அசாதாரண கால நிலையின் போது, அதிக மழை வீழ்ச்சியினாலும், மண் சரிவினாலும் கண்டி மாவட்டத்தில் கல்ஹின்னை பகுதியில் பாதிக்கப்பட்ட



படகொல்லாதெனிய ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயம், கல்கொடுவ மற்றும் ஹல்கொல்ல ஆகிய பிரதேசங்களை கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் சென்று பார்வையிட்டதோடு, மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

அதன்போது,நிலைமையை ஆராய்ந்து,மதிப்பீடு செய்து,உரிய முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினர் (NBRO) இன்னும் அங்கு வரவில்லையென சுட்டிக்காட்டப்பட்டது.

படகொல்லாதெனிய ஜெமாலியா முஸ்லிம் வித்தியாலயம் அமைந்துள்ள மலைப் பிரதேசம் பீரிஹெல, துத்திரிப்பிட்டி ஊடாக கல் கொட்டுவையைத் தாண்டி, இரண்டு கிலோமீட்டர் தூரத்துக்கு நீண்டு செல்கின்றது. நிலத்தில் சில இடங்களில் ஆழமான வெடிப்புகள் காணப்படுகின்றன.

அந்த மலைப் பாங்கான பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட பாடசாலை, வீடுகள் ஆகியவற்றை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் சென்று பார்வையிட்டார். கல்கொட்டுவை மண்சரிவில் 11 பேர் புதையுண்டு இறந்துள்ளனர். அவ்வாறே படகொல்லாதெனியஜெமாலியா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த 11 வயது மாணவர் ஒருவரும் மண் சரிவில் உயிர் நீத்திருந்தார்.

இந்த மலைப் பிரதேசத்தில் வசித்த நூற்றுக்கு மேற்பட்டோர் கடந்த 30ஆம் திகதி அச்சத்தின் காரணமாக அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளனர். தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் (NBRO) அறிக்கையைப் பொறுத்தே அவர்கள் மீண்டும் அங்கு குடியேறுவது சாத்தியமாகலாம்.

இந்தப் பயணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் உடன் கண்டி மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் செயலாளரும், கட்சியின் உயர்பீட உறுப்பினரும், முன்னாள் பன்விலை பிரதேச சபை உறுப்பினருமான எஸ்.ஏ.இத்ரீஸ், கட்சி செயற்பாட்டாளர்களான கல்ஹின்னை ஹபீல்( ஷாபி), அஷ்ரப், ரிஸ்வின் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

கல்ஹின்னை அனர்த்த நிவாரண குழு உறுப்பினர்களுடன், ஜம்இய்யதுல் பதாஹ் அரபுக் கல்லூரியில் கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது.

சில நாட்களுக்கு முன்னர், இதே பிரதேசத்திற்கு அண்மையில் மண்சரிவு அனர்த்தத்தினால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்ட. நம்புக்ஸல கிராமத்திற்கும் அவர் சென்றிருந்ததோடு, பாராளுமன்றத்திலும் அங்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றிப் பிரஸ்தாபித்து, பிரதமரிடமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை நேரில் வலியுறுத்தியிருந்தார்.

## இலட்சக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் கலீதா ஜியாவின் மகனும், பங்களாதேஷ் தேசியவாத கட்சியின் (பிஎன்பி) செயல் தலைவருமான தாரிக் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

17 ஆண்டுகளுக்குப் பிறகு தாரிக் ரஹ்மான் நேற்று நாடு திரும்பினார்.

டாக்கா விமான நிலையத்தில் லட்சக்கணக்கான பிஎன்பி தொண்டர்கள் திரண்டு வந்து, தாரிக் ரஹ்மானை வரவேற்றனர்.

அவரது மனைவி ஜூபைதா, மகள் ஜைமா ஆகியோரும் உடன் வந்தனர். குண்டு துளைக்காத பேருந்தில் தாரிக் ரஹ்மானும் குடும்பத்தினரும் டாக்காவில் உள்ள வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், பூர்பாச்சல் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய தாரிக் ரஹ்மான்,

“எனது நாட்டுக்காக என்னிடம் ஒரு திட்டம் உள்ளது. மக்கள் நீண்டகாலமாக விரும்பிய பாதுகாப்பான நாடாக பங்களாதேசை மாற்றுவதே அது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை உருவாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இந்த நாடு மலைகளில் வசிப்பவர்களுக்கும், சமவெளிப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், இந்துக்களுக்கும், பவுத்தர்களுக்கும் மற்றம் கிறிஸ்தவர்களுக்கும் சொந்தமானது.” -என்று குறிப்பிட்டார்.

பங்களாதேஷில் மாணவர்களின் போராட்டத்தால் பிரதமர் பதவியை ராஜினாமா செய்த ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

பங்களாதேஷில் தற்போது முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு உள்ளது.

அங்கு பெப்ரவரி 12-ம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது. தற்போதைய சூழலில் பங்களாதேஷ் தேசியவாத கட்சி, மாணவர் சங்கங்கள் உருவாக்கிய தேசிய மக்கள் கட்சி, அடிப்படைவாத கட்சியான ஜமாத் “இ” இஸ்லாமி ஆகியவை தேர்தல் களத்தில் உள்ளன.

கடந்த 2008-ம் ஆண்டு செப்டம்பரில் மனைவி, குழந்தையுடன் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் குடியேறிய தாரிக் ரஷ்மான், சுமார் 17 ஆண்டுகள் அரசியல் துறவறம் பூண்டிருந்தார்.

தற்போது நாடு திரும்பியுள்ள அவர், வரும் பொதுத்தேர்தலில் பிஎன்பி கட்சியின் பிரதமர் வேட்பாளராக களமிறங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பக்கச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்கின்றன.

இந்தச் சூழலில், ஹமாஸ் அமைப்பு வெளியிட்டுள்ள விரிவான ஆவணம், அந்த தாக்குதலின் பின்னணி, தங்களின் நிலைப்பாடு மற்றும் எதிர்கால பாதையை விளக்கும் முயற்சியாக அமைந்துள்ளது.

காசாவில் தொடரும் போர் மற்றும் அழிவுகளுக்கிடையே கூட, கல்வி முறியடிக்க முடியாதவை.

மேற்கு கரை பகுதியில் இஸ்ரேல் - பலஸ்தீன் இடையில் பதற்றம். பெத்லெஹேம் அருகே மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

வடக்கு இஸ்ரேலில் நடந்த தொடர் வன்முறை சம்பவம், இஸ்ரேல் - பலஸ்தீன் மோதலின் தொடர்ச்சியான பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹமாஸ் அமைப்பு, அக்டோபர் 7 தாக்குதல்களைப் பற்றி பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை நடத்த இஸ்ரேல் அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளது. 42 பக்கங்களைக் கொண்ட ஆவணத்தை வெளியிட்ட ஹமாஸ், பொதுமக்கள் கொலை அல்லது அட்டூழியங்களில் ஈடுபட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது.

மேற்கத்திய ஊடகங்கள் மற்றும் சியோனிஸ லாபி குழுக்கள் தவறான தகவல் பிரச்சாரத்தை முன்னெடுத்ததாகவும், அதுவே காசாவை அழிக்க முன்கூட்டியே திட்டமிடப்பட்ட போரை நியாயப்படுத்த பயன்படுத்தப்பட்டதாகவும் ஹமாஸ் குற்றம்சாட்டுகிறது.

அக்டோபர் 7 தாக்குதலில் சுமார் 1,200 இஸ்ரேலியர்கள் உயிரிழந்ததாகவும், 251 பேர் கைதிகளாக காசாவுக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அரசியல் நடவடிக்கைகளால் ஐரோப்பிய சாலைப் பாதுகாப்பு அமைப்பில் (நுவுளுஊ) இருந்து வெளியேற்றப்படும் இஸ்ரேல்.

பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலியர்கள் கைது நடவடிக்கைகள் அதிகரிக்கும் நிலையில் அறிவுஜீவிகள், எழுத்தாளர்கள் குறிவைக்கப்படுகின்றனர்.

காசா பகுதியில் சமாதான ஒப்பந்தம் அமலில் உள்ளபோது மனிதாபிமான நெருக்கடி,அரசியல் பதற்றம்.

இஸ்ரேல் - துருக்கி உறவுகளில் பதற்றம் அதிகரித்து வருகிறது.

தாக்குதலுக்குப் பிறகு, இராணுவம் சாராத கைதிகளை விடுவிக்க முன்வந்ததாகவும், ஆனால் இஸ்ரேல் ஆரம்பத்தில் அதை மறுத்ததாகவும் ஹமாஸ் கூறுகிறது. பின்னர், 2023 நவம்பரில் நடந்த குறுகிய இடைநிறுத்தத்தின் போது, சுமார் 100 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

பொதுமக்களை கொல்வது தங்களின் மதம், ஒழுக்கம் மற்றும் கல்விக்கு எதிரானது என்றும், மருத்துவமனைகள், பள்ளிகள், வழிபாட்டு தலங்கள் அல்லது ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை என்றும் ஹமாஸ் வலியுறுத்துகிறது.


இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளில், தங்கள் சொந்த குடிமக்கள் இருந்த பகுதிகளிலும் குண்டுவீச்சு நடந்ததாக சில இஸ்ரேலிய ஊடகங்களே செய்திகள் வெளியிட்டதை அந்த ஆவணம் குறிப்பிடுகிறது.

சிரியாவில் தொடர்ச்சியாக ஏற்படும் பாதுகாப்பு நெருக்கடிகள் மற்றும் வெளிநாட்டு தலையீடுகள், நாட்டின் நிலைத்தன்மையை கடுமையாக பாதித்து வருகின்றன.

காசாவில் ஹமாஸூக்கு அரசியல் அல்லது இராணுவ பங்கு இல்லை எனக் கூறும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் 20 அம்சத் திட்டத்தையும், சர்வதேச நிர்வாக முன்மொழிவுகளையும் ஹமாஸ் நிராகரித்து, பலஸ்தீனர்கள் தங்கள் விவகாரங்களை தாங்களே நிர்வகிக்கத் தகுதி உடையவர்கள் எனத் தெளிவுபடுத்தியுள்ளது.







# முன்னைய அரசாங்கம் போல் மருந்துப் பொருள் மாபியாவைத் தொடர்வதற்கு மக்கள் இந்த அரசாங்கத்திற்கு ஆணையைப் பெற்றுத் தரவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச




சில வருடங்களுக்கு முன்பு, இந்நாட்டில் மிகவும் ஊழல் நிறைந்த மற்றும் மோசடியான தரமற்ற மருந்து மோசடி நடந்து கொண்டிருந்த வேளை, அதை நாட்டுக்கு வெளிக்கொணர்ந்து, அம்பலப்படுத்தி, அப்போதைய சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கூட ஐக்கிய மக்கள் சக்தியே கொண்டு வந்தது. அப்போது நடந்து வந்த இந்த தரமற்ற மருந்து மோசடிகள் புதிய அரசாங்கத்துடன் முடிவுக்கு வரும் என்றே கருதப்பட்டன. ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் கீழும் தரமற்ற இந்த மருந்து மாபியா தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் தரமற்ற தடுப்பூசிகளால் இரண்டு பெண்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். தரமற்ற தடுப்பூசிகள் மற்றும் மருந்துப் பொருட்கள் கொள்வனவு மோசடி இன்றும் நடந்தே வருகிறது. மருந்துப் பொருட்கள் மோசடியைத் தொடர்வதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் தமது ஆணையைப் பெற்றுத் தரவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ், பதுளை மாவட்டம், மஹியங்கனை ஆதார வைத்தியசாலைக்கு 46.5 இலட்சம் ரூபா மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று (28) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட டித்வா சூறாவளியால் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் மஹியங்கனை ஆதார வைத்தியசாலை கடுமையாக சேதமடைந்தது.

ஆகையால், இந்த வைத்தியசாலையின் தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு ரூபா.38 இலட்சம் பெறுமதியான னுயைடலளளை ஞநெடநசரஅi ஒன்றும், ரூபா.7.6 இலட்சம் பெறுமதியான டீடரந ஒழுவ சுழு ஞலளவநஅ 600பின இயந்திரமொன்றும் இன்று இவ்வாறு நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டன. சிறுநீரக நோயாளிகளின் நலன் கருதியே இந்த உபகரணத் தொகுதிகள் நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தி தரம் குறைந்த மருந்துப் பொருட்கள் தொடர்பில் குரல் எழுப்பிய சமயங்களில், தற்போதைய அரசாங்கத்தைச் சேர்ந்த அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இதற்கு ஆதரவு தெரிவித்து மௌனம் காத்து வந்தனர். தரமற்ற மருந்துப் பொருட்கள் கொள்வனவை நிறுத்துவோம் என்று தேர்தல் மேடைகளில் கோஷங்களை எழுப்பிய தற்போதைய ஆளும் தரப்பு அமைச்சர்கள், இன்று மக்களுக்கு தரமற்ற மருந்துகளையும் தடுப்பூசிகளையும் விநியோகித்து வருகின்றனர். தற்போதைய சுகாதார அமைச்சர் உட்பட அனைத்து சுகாதார அதிகாரிகளும் இந்த மருந்துப் பொருட்கள் மாபியாவை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

- தரமற்ற மருந்துப் பொருட்களை ஆய்வு செய்து பார்ப்பதற்காக பொருத்தமான கட்டமைப்பை நாம் இப்போதாவது ஸ்தாபிக்க வேண்டும்.

இந்த மருந்துப்பொருள் மாபியாவால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பரிதாபமாக பலியாகி வருகின்றன. மருந்துகள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் போது, அவை தரமானதா, நுகர்வுக்கு ஏற்றனவா என தகுதிச் சான்றிதழ் வழங்கும் முன்னர், சுகாதார அமைச்சும் போலவே இந்த மருந்துகளின் தரம் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிசோதனைகள் மூலமும் சர்வதேச நிறுவனங்கள் மூலமும் இவை ஆராயப்பட வேண்டும். நமது நாட்டில் இன்னும் மருந்துகளின் தரத்தை சரிபார்க்கக்கூடிய பரிசோதனை ஆய்வு கூடமோ வசதிகளோ இல்லை. இதற்கான ஆய்வு கூட வசதிகளை நாம் நிறுவ வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

- இந்தப் பொறுப்பிலிருந்து அமைச்சர் தப்பிக்க முடியாது.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் தொடர்பான பொறுப்பிலிருந்து அமைச்சரும் உரிய அதிகாரிகளும் தப்பிக்க முடியாது. முன்னாள் அமைச்சரைப் போலவே தற்போதைய சுகாதார அமைச்சரும் இந்தப் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. 220 இலட்சம் மக்கள் சார்பாக ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் வீதிகளில் இறங்கி, இந்த தரமற்ற மருந்து மோசடியை நடத்தும் அனைவருக்கும் எதிராகவும் இந்த மாபியாவிற்கு எதிராகவும் பேராடும். அவ்வாறே, இந்த தரமற்ற மருந்துப் பொருட்கள் மோசடியை ஒழிப்பதற்கு இந்த அரசாங்கம் எடுக்கும் சிறந்த சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சி பூரண ஆதரவைப் பெற்றுத் தரும். அடிப்படையானதும் மனித உரிமையாகவும் காணப்படும் சுகாதார நலன் கருதி, சேனக பிபில மருந்துக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

# களுத்துறையில் ஹஜ் வழிகாட்டல் கருத்தரங்கு








(பி.எம்.முக்தார்)

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் ஹஜ் உம்ரா குழு இணைந்து, 2026 ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரையை மேற்கொள்வதற்கு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த யாத்திரிகர்களுக்கான கருத்தரங்கு 2025 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஜாமிஆ நளீமியா ADRT கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஜாமிஆ நளீமியாவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஷ்ஷேக் அறபாத் கரீம் நளீமி அவர்களால் ஹஜ் தொடர்பான உரை நிகழ்த்தப்பட்டது.

சவூதி அரேபியாவில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகளும் பயணம் தொடர்பான அறிவுரைகள் பற்றி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள கணக்காளர் எஸ்.எல்.எம். நிப்ராஸினால் கருத்தரங்கு நிகழ்த்தப்பட்டதோடு, திணைக்கள உத்தியோகத்தர்களான கே.ஏ.சப்ரி, எம்.ஐ.கியாஸ், எஸ்.எம்.ஜாவித், எம்.ரமீஸ் மற்றும் ஏ.சீ.எம். ரியாஸ் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன்போது அதிகளவிலான யாத்திரிகர்கள் கலந்து கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இக் கருத்தரங்கில் 2026 ஆம் ஆண்டு ஹஜ் செல்லவுள்ள யாத்திரிகர்களுக்கு ஹஜ் கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டதுடன், சவூதி அரேபியாவில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், மருத்துவ ஆலோசனைகள் மற்றும் பயணத்துடன் தொடர்புடைய தேவையான அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

இறுதியாக முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷேக் முப்தி முர்சி நன்றியுரை நிகழ்த்தினார்.

# பாலாவி - குவைத் கிராம மக்களுக்கு இலங்கை முஸ்லிம் சேரிட்டியினால் நிவாரண உதவிகள்





(சியாஜ்)

பாலாவி – குவைத் கிராமத்தில் டித்வா சூறாவளி மற்றும் வெள்ள அனர்த்ததினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, இலங்கை முஸ்லிம் சேரிட்டி அமைப்பின் சார்பில் மனிதநேய நிவாரண உதவிகள் ஞாயிற்றுக்கிழமை (28) இலங்கை முஸ்லிம் சேரிட்டி இயக்குநர் முஜாஹித் நிசார் தலைமையில் நடைபெற்றது.




அண்மையில் ஏற்பட்ட அனர்த்ததினால் பல குடும்பங்கள் தங்களின் வேலை வாய்ப்புகளையும் வருமான வழிகளையும் இழந்து கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில், அவர்களின் அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு பாய், தலையணை, துணிகள் (towels) உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய இந்த நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

சமாதான நீதவான் ஜலீலின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆப்தீன் எஹ்யா, பள்ளிவாசல் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், சமூக முன்னணியாளர்களான சப்ரான், சமீர் மற்றும் கிராம இணைப்பாளர் நிசாம் ஆகியோர் இந்த மனிதநேய முயற்சியில் இணைந்து பங்களித்தனர்.

இந்த நிவாரண உதவித் திட்டத்தின் மூலம், டித்வா சூறாவளி அனர்த்ததினால் ஏற்பட்ட அவல நிலைகளை ஓரளவு சமாளிக்க கூடியதாக கிராம மக்களுக்கு அமையும் என்பதுடன் இலங்கை முஸ்லிம் சேரிட்டி எதிர்காலத்திலும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் தேவையுள்ள மக்களுக்கு தொடர்ச்சியாக நிவாரண உதவிகளை செய்யும் என்ற உறுதியை மீண்டும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனர்த்த மீட்பு திட்டங்களும் அரசின் முன்னெடுப்புக்களும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

2025 நவம்பர் மாதம் 22 ஆம் திகதி கடுகன்னாவையில் ஏற்பட்ட மண்சரிவின் பின்னர் 06 பேர் உயிரிழந்ததை தொடர்ந்து தொடர்ச்சியாக சில தினங்கள் ஏற்பட்ட அசாதாரண காலநிலை மற்றும் அதிகப்படியான மழை வீழ்ச்சி காரணமாக நாடு மிக மோசமான பாதிப்புக்களுக்கும் இழப்புக்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அந்த பாதிப்பின் பின்னர் வெள்ளத்தாலும் மண்சரிவாலும் பாதிக் கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரண உதவியாக ஒரு குடும்பத்திற்கு ரூபா 25,000 என்ற அடிப்படையில் வழங்க ஒவ்வொரு கிராம சேவகர் மட்டத்திலும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதன்படி 2025 டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி வரையில் பாதிக்கப்பட்ட சுமார் 90 வீதமானவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்க ப்பட்டதாக அரசாங்கம் அறிவிக்கின்றது. அதற்காக 7200 கோடி ரூபா அளவில் செலவிடப்பட்டிருக்கின்றது. அத்துடன் ஏற்பட்ட அனர்த்த பாதிப் புக்களில் இருந்து நாட்டை மீள கட்டியெழுப்புவதற்காக மேலும் 50,000 கோடி (500 பில்லியன்) ரூபா அளவில் நிதி தேவைப்படுவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா அறிவித்துள்ளார். அதற்கான நிதியை பெறுவதற்காகன குறைநிரப்பு பிரேரணை 2025.12.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த குறை நிரப்பு பிரேரணை தொடர்பான விவாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்த விவாதத்தின் மீது பேசிய ஜனாதிபதி ஒதுக்கப்படுகின்ற நிவாரணங்களுக்கான நிதி எவ்வாறு வழங்கப்படும் என்பது தொடர்பாக மிகவும் தெளிவான விளக்கம் ஒன்றை முன்வைத்தார். வீடகள் ஓரளவுக்கு பாதிக்கப்பட்வர்கள், வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்பட்டவர்கள், வியாபார நிலையங்கள் பாதிக்கப்பட்டவர்கள், கால்நடை வள்ர்ப்பு பன்னையாளர்கள், விவசாயிகள் உட்பட அடிமட்டம் முதல் உயர்மட்டம் வரையில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் முறையாக அவர்களை மீண்டும் எழுப்பி விடும் வகையில் நியாயமான அடிப்படையில் இழப்பீடுகள் வழங்கப்படும் என்பதை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்த அனர்த்தத்தால் பாதிக்கப் பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 22 இலட்சத்து மேல் ஆகும். இவர்கள் 4,55,405 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். 1,300 வீடுகள் அளவில் முற்றாகவும் 50,556 வீடுகள் கட்டிடங்கள் ஒரு பகுதியளவிலும் சேதமடைந்திருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் இதுவரையில் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கைகள் கூறுகின்றன. ஏற்கனவே அவசர நிதி உத வியாக பாதிப்புக்குள்ளானவர்களது வீடுகளை துப்புறவு செய்துகொள்ளவும் வீட்டிற்கு தேவையான தளவாடங்கள் சமயலரை உபகரணங்களை கொள்வனவு செய்யவும் என்று 250,00 ரூபா முதல் 75,000 ரூபா வரை நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதே நேரம் ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட மேலதிக நிவாரண உதவிகளை 2026 ஆம் ஆண்டில் இருந்து வழங்கவே மேலும் 50 ஆயிரம் கோடி ரூபா அவசியம் என்று பிரதமர் ஹரினி அமரசூரியவால் குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு 2025 டிசம்பர் 19 ஆம் திகதி அதற்கான அங்கீகாரம் பாராளுமன்றத்தில் வழங்கப்பட்டது.

அதே நேரம் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்தும் இலங்கை அரசாங்கம் அவசர நிதி உதவியாக 200 மில்லியன் அமெரிக்க டாலர் (6,000 கோடி ரூபா) நிதி உதவி கோரிக்கையொன்றையும் முன்வைத்திருக்கின்றது. இந்த வேண்டுகோள் தொடர்பாக பரிசீலனை செய்து பார்த்துவிட்டு 2015 டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று தீர்மானமாகி இருந்தது. அதே நேரம் இலங்கையை மீள கட்டியெழுப்புதல் என்ற திட்டத்தின் அடிப்படையில் நாட்டில் பல கோணங்களில் இருந்தும் நிதி உதவிகளும் கிடைத்த வண்ணம் உள்ளன. இதுவரையில் அந்த நிதியத்ததிற்கு 220 கோடி ரூபா அளவில் நிதி கிடைத்திருப்பதாக குறித்த நிதியத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். எவ்வாறாயினும் வெள்ளம் மற்றும் மணசரிவு அனத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீள கட்டியெழுப்புவ தென்பது இலகுவான காரியமாக இல்லை. முன்னோக்கி செல்ல இருப்பது மிகவும் கடினமான ஒரு பயணமாகும். குறை நிரப்பு பிரேரணை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டாலும் நிதி எங்கிருந்து பெறுவதென்பதில் சிக்கல்கள் காணப் படுகின்றன.

ஆனாலும் அவசர அனர்த்த நிதி உதவியாக ஆசிய அபிவிருத்தி வங்கி 6,000 கோடி ரூபா (200 மில்லியன் அமெரிக்க டாலர்) மற்றும் உலக வங்கி 3600 கோடி ருபா (120 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) என்ற அடிப்படையில் வழங்க இருக்கின்றன என்ற தகவல்களும் வெளியாகி இருக்கின்றன. இதனை நிதி அமைச்சு உறுதிப்படுத்தி இருக்கின்றது. இவ்வாறு பார்க்கின்ற போது கிட்டத்தட்ட 15,000 கோடி ருபாய்கள் வெளிநாட்டு நிதி எதவிகளாக கிடைக்க உள்ளன.

அது தொடர்பாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ கடந்த 2025.12.17 ஆம் திகதி அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிடுகையில் இந்த அனர்த்த பாதிப்பு இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை ஒருபோதும் பாதிக்காது. இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்பை காரணம் காட்டி நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும், நாடு மீண்டும் 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்டது போன்று பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் என்று சமூக ஊடகங்கள் வாயிலாக பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். அத்தகைய கதைகளை நம்ப வேண்டாம். மக்கள் தைரியமாக இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் இலங்கை கடந்த மூன்று காலாண்டு காலப்பகுதியிலும் கணிசமான பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கின்றது. மூன்றாவது காலாண்டு நிறைவில் 4.5மூ வீத பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்திருக்கின்றது. இந்த பொருளாதார வளர்ச்சி வீதம் 2025 ஆம் ஆண்டு 5மூ வீதமாக அமையும் என்ற எதிர்பார்ப்பு இருக்கின்றது. ஆனாலும் தற்கோது ஏற்பட்டுள்ள அனர்த்த பாதிப்பு இழப்புக்கள் காரணமாக அந்த இலக்கை அடைய முடியுமா என்ற சந்தேகங்கள் கிளப் பப்படுகின்றது. அத்துடன் பொருளாதார வளர்ச்சிக்கு கைகொடுக்கக்கூடிய கணிச மான துறைகளில் முன்னே ற்றம் ஏற்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுப் பற்றபக்குறை 2200 பில்லியன் ரூபாய்களாக இருந்தது. ஆனாலும் வரிகள் துறையில் கிடைத்துள்ள வருமானம் 4960 பில்லியன் ரூபாய்களாக இருக்கின்றன. எதிர்பார்த்ததை விட அதிகமான வருமானம் வரிகள் மூலம் கிடைத்துள்ளன. அதே நேரம் 2026 ஆம் ஆண்டிற்கான வருவாய்களை அதிகரிப்பதற்கான துறைகளாக உள்ளாசப் பிரயாணத்துறை, ஏற்றுமதித்துறைகளிலான வருமானம், வெளிநாடுகளில் தொழில் செய்பவர்களால் அனுப்பப்படுகின்ற பணம் அந்நிய செலாவனியாக கிடைப்பவை, வெளிநாட்டு முதலீடுகள் என்பன முக்கியமான வருவாய்க்கான துறைகளாக இருப்பதால் இத்துறைகள் குறித்து திட்டமிட்ட அடிப்படையில் கவனம் செலுத்தப்பட்டு பதிய உத்திகள் கையாளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதே நேரம் கடும் மழை, வெள்ளம், மண்சரிவு மற்றும் புயல் காற்று காரணமாக நாட்டின் பல துறைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளன. குறைநிரப்பு பிரேரணை மூலம் பெறப்படும் 50 ஆயிரம் கோடி ரூபாவில் 10 ஆயிரம் கோடி (100 பில்லியன்) அனர்த்தத்தால் சேதமடைந்த வீடகளை திருத்த செலவிடப்படும். மேலும் 25,000 கோடி (250 பில்லியன்) ரூபா அடிப்படை வாழ்க்கை வசதிகளை மேம்படுத்த. குறிப்பாக வெள்ளம், மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலைகள், சிறிய பாதைகள் பாதைகள், புகையிரத பாதைகள், பாலங்களை திருத்தி பொதுப் போக்குவரத்தை சீர் செய்ய பயன்படுத்தப்படும். மீதி 15,000 கோடி (150 பில்லியன்) ரூபாய்கள் மக்களது பொருளாதார மற்றும் நாசமடைந்துள்ள வாழ்க்கையை மீட்டெடுக்க பயன்படுத்தப்படும். பாதிக்கப்பட்டுள்ள கைத்தொழில்கள், விவசாயம், வர்த்தகம், வாணிபம் உள்ளிட்ட சிறிய மற்றும் கணரக தொழிற்சாலைகளை மீள கட்டியெழுப்ப பயன்படுத்தப்படும் என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இருந்தாலும் ஒவ்வொரு துறைக்குமான பாதிப்புக்கள் எத்தகையது என்ற அடிப்படையில் இதுவரையில் முழுமையான மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்ப டவில்லை. ஆனாலும் போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குனசேன சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் தெரிவிக்கையில் வெள்ளம், முண்சரிவு காரணமாக ஏ மற்றும் பி தரத்திலான பாதைகளுக்கு ஏற்பட்ட இழப்பு மாத்திரம் 6200 கோடி ரூபா அளவிலாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டி ருக்கின்றது. மொத்தமாக 1,450,64 கிலோமீட்டர் விஸ்தீரணமுடைய பாதைகள் பாதிக்கப் பட்டுள்ளன. இதில் மத்திய மாகாணத்தில் மாத்திரம் 723 கிலோ மீட்டர் விஸ்தீரணமுடைய பாதைகள் பழுதடைந்திருப் பதாகவும் அவற்றை திருத்த 5200 கோடி ரூபா அளவில் செலவிடப்பட வேண்டும் என்று அறிவித்தார். அவ்வாறே வெள்ளம் காரணமாக பல நகரங்களில் குவிந்துள்ள குப்பைகளை அப்புறப்படுத்தி நகர வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வரவும் பாரிய கஷ்டங்கள் உள்ளன. இவ்வாறாக கம்பளை நகரத்தில் மாத்திரம் 10,00 மெற்றிக் தொன் குப்பைகள் குவித்து வைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் சேதமடைந்த கடைகளுக்குள் இருந்த பொருட்களாகும்.

(அவற்றை எங்கு கொண்டு பொய் கொட்டுவது, எவ்வளவு காலம் செல்லும் என்ற நடைமுறை பிரச்சினைகள் எழுந்துள்ளன.)

பாதிப்பு இவை மட்டும் அல்ல. மக்களது நானாவித இழப்புக்கள் உள்ளன. வெள்ளம் மற்றும் மண்சரிவுகளுக்குள்ளான சுமார் 10 இலட்சம் மக்களது ஆவணங்கள் அழிந்து நாசமாகி உள்ளன. குறிப்பாக பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமண பதிவு சான்றிதழ், காணி உறுதிகள், சாரதி அனுமதிப் பத்திரம், அடையாள அட்டை என்று ஏராளமான பாதிப்புக்கள் உள்ளன. இவைகளை வழங் குவதற்காக இலங்கை முழுவதும் பதிவாளர் நாயகம் சசிதேவ் ஜகதீபன் அறிவித்துள்ளார். அதனால் இயற்கை அனர்த்த பாதிப்பில் இருந்து நாட்டைம ீட்டு கட்டியெழுப்ப ஒருபுரம் நிதித் தேவை இருப்பது போன்றே பல்வேறுவிதமான அனர்த்தத்திற்கு பிற்பட்ட மீட்பு திட்ட தந்திரோபாயமும் அவசியமானதாக இருக்கின்றது.



# அநுர அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்கிறது

## இம்ரான் எம். பி - சாடல்

(எஸ்.ஏ.பறூஸ்)

இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது ஆபத்தானது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகஷரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில்

திருகோணமலை மாவட்ட கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் தொடர்பான உப குழு கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் றொஷான் அக்மீமன தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

மாவட்ட மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எனக்கோ, குகதாசன் எம். பி இற்கோ இந்த கூட்டத்திற்கு அழைப்பு வரவில்லை. மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்க்கட்சியின் வசம் இருப்பதால் உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்களுக்கும் அழைப்பு இல்லை. தனியொரு எம்.பியால் அதிகாரிகளை வைத்து கொண்டு இந்த கூட்டம் நடைபெறுகின்றது. இதன் மூலம் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்து சொல்வதற்கான வாய்ப்பை இந்த அரசாங்கம் முடக்கியுள்ளது. இதன் மூலம் இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது தெளிவாகின்றது.

இது ஆபத்தான விடயமாகும்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது குறித்து பொதுமக்கள்



கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்திருந்தார்.

# நிவாரண பணி பகிஷ்கரிப்பை கைவிட்ட கற்பிட்டி கிராம மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

(சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 31 கிராம சேவையாளர் பிரிவுகளில் கடந்த வெள்ளிக்கிழமை (19) முதல் இடம்பெற்று வந்த கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அனர்த்த நிவாரண வேலைத்திட்ட தற்கால பணி விலகல் திங்கட்கிழமை (22) உடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கற்பிட்டி பிரதேச செயலாளருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து செவ்வாய்க்கிழமை (23) முதல் கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 31 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கிராம உத்தியோ கத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் அனர்த்த நிவாரண வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கு தீர்மானித்து அரசின் நிவாரண நிதி கொடுப்பனவு மற்றும் உலர் உணவு பொதிகள் வழங்கும் பணிகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரீ அரிசி ஆலை உரிமையாளரை கௌரவித்த ஓட்டமாவடி பிரதேச செயலாளர்



(எஸ்.எம்.எம். முர்ஷித்)

தொழில் முயற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் தேசியத்திற்கும் சர்வதேசத்திற்கும் பங்களிப்புச் செய்யும் வியாபார, தொழில் முயற்சியாளர்களைக் கௌரவித்து ஊக்கமடையச்செய்யும் நோக்கில் பல நிறுவனங்கள் கௌரவிக்கப் பட்டன.

இந்த வகையில் கடந்த 19ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற வியாபார தொழில் முயற்சியாளர் களைக் கௌரவிக்கும் நிகழ்வில் அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு கௌரவத்தினை வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ரீ ஸ்டார் அரிசி ஆலை உரிமையாளர் எச்.எம்.முஹம்மட் பாறுக் தனது அரிசி உற்பத்திக்காக மேட் இன் ஸ்ரீலங்கா விருதினைப் பெற்றுக் கொண்டார்.

இவரை கௌரவிக்கும் முகமாக பிரதேச செயலாளர் ஏ தாஹிர் தலைமையில் பிரதேச செயலக ஊழியர்களுக்காக இடம்பெறும் வாராந்த காலை ஆராதனையின் போது உத்தியோகத்தர்கள் முன்னிலையில் கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாலைச்சேனைக்கு முஸ்லிம் சேரிட்டி உலர் உணவு உதவிகளை வழங்கியது

(சியாஜ்)

மதுரங்குளி பாலைச்சேனை கிராமத்தில் வெள்ளப் பாதிப்புக் குள்ளான குடும்பங்களுக்கு கிறிஸ்மஸ் கால நிவாரண உதவியாக முஸ்லிம் சேரிட்டி நிறுவனத்தினால் உலர் உணவு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

முஸ்லிம் சேரிட்டி இயக்குனர் முஜாஹித் நிசார் தலைமையில் நடைபெற்ற இவ்நிகழ்வை சமாதான நீதிவான் ஜலீல் ஒருங்கிணைத்தார்.

வெள்ள அனர்த்ததினால் பல குடும்பங்கள் வேலை வாய்ப்பு மற்றும் வருமான இழப்புகளுக்கு உள்ளாகி பல்வேறு பொருளாதார பாதிப்புக்களை சந்தித்தனர்.

அவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு கிறிஸ்மஸ் பண்டிகைக்கான உதவியாக இவ்வுதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆப்தீன் எஹ்யா,





நல்லந்தலுவா ஜ/ம்மா பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் சமூக முன்னணி உறுப்பினர்கள் இணைந்து பங்களித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மீராவோடை பிரதேச வைத்தியசாலையின் மகப்பேற்றுப்பிரிவு மீண்டும் ஆரம்பித்து வைப்பு





(எஸ்.எம்.எம். முர்ஷித்)

மீராவோடை பிரதேச வைத்தியசாலையின் மகப்பேற்று பிரிவு வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் றிஸ்வியா சஜ்ஜாத் தலைமையில் மீண்டும் (15) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் வைத்தியசாலையில் மகப்பேற்று பிரிவு இயங்கி வந்த நிலையில் ஆளனிப்பற்றாக்குறை காரணமாகவும் மகப்பேற்று பிரிவின் இயந்திரங்கள் பழுதடைந்த காரணத்தாலும் இயங்காமலிருந்த நிலையில் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் றிஸ்வியா சஜ்ஜாத் மற்றும் வைத்தியசாலையின் அபிவிருத்தி குழுவின் முயற்சினால் மீண்டும் இன்று ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.முரளீஸ்வரன் கலந்து கொண்டதுடன் அதிதிகளாக பேராசிரியரும் மகப்பேற்று வைத்திய நிபுணருமான எம்.திருக்குமார், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரீக், ஓட்டமாவடி பிரதேச சபையின் பிரதி தவிசாளர் ஏ.எச்.நுபைர், சபை உறுப்பினர்கள் அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், மீராவோடை மீரா ஜூம்ஆ பள்ளிவாயல் நிருவாகிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# உக்குவளை அனர்த்த பணிகளில் அத்தனகலை பிரதேச சபை தவிசாளர் மற்றும்உறுப்பினர்கள் பங்கேற்பு

(உக்குவளை ஜெலீல்)

அண்மையில் ஏற்பட்ட தொடர்மழை மற்றும் காற்று காரணமாக ஓவிலிகந்த, பனசலதென்ன, எல்கடுவ, உக்குவளை 13வது மைல்கல் அரன்வத்த, வெஹிகல, பூஜாகொட , செம்புவத்த, ஆகிய இடங்களில் ஏற்பட்டிருந்த மண்சரிவுகளை உக்குவளை பிரதேசபை தவிசாளர் நேரில் சென்று பார்வையிட்டதுடன், அவ்விடங்களை இயன்றளவில் சீரமைப்புச் செய்யப்பட்டது.

உக்குவளை பிரதேச சபை தவிசாளர் நிமல் கருனாரத்ன உதவி தவிசாளர் எம். ராபி ஆகியோருடன் பிரதேச சபையின் சில உத்தியோகத் தர்கள் மற்றும் ஊழியர்களும் இச் சிரமதான பணிகளில் கலந்து கொண்டதுடன், உக்குவளை 13 வது மைல் கல் அருகில் அரன்வத்த என்ற இடத்தில் ஏற்பட்டிருந்த மன்சரிவை சீர்செய்வதில் அத்தனகல்ல பிரதேச சபை தவிசாளர் உதவி தவிசாளர் ஆகியோருடன் ஊழியர்களும் நட்புக்காக சிரமதான பணிகளில் ஈடுபட்டார்கள் என உதவித் தவிசாளர் எம். ராபி தெரிவித்தார்.

மேலும் உக்குவளை பிரதேச பிரதேசத்தில் மேற்கொள்ளப் படவிருக்கும் சிரமதான பணிகளுக்கென, பிரதேச சபை





உதவித் தவிசாளரின் கோரிக்கைக் கிணங்க அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஒரு தொகை நிதியை ஒதுக்கியுள்ளதாகவும், குறிப்பிட்ட இடங்களில் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்கு அனர்த்தங்களால் ஏதும் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பின் அதுகுறித்து பரிசீலனைசெய்து பிரதேச சபையும் பிரதேச செயலகமும் நஷ்ட ஈடுகளையும் அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# அரனாயக்க ஆஸ்பத்திரிக்கு வைத்திய உபகரணங்களை அன்பளிப்பு செய்த சஜித்





டித்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவுகளால் கடுமையாக பாதிக்கப்பட்ட கேகாலை மாவட்டம், அரநாயக்க பிரதேச மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில், ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப் பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ் அரநாயக்க பிரதேச வைத்தியசாலைக்கு ரூபா. 29 இலட்சம் மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங் களை (20) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நன்கொடையாக வழங்கி வைத்தார்.

# கபலுலூன் ஆசிரியர் 37 வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு

(எம்.கே.எம்.நியார்)



பதுளையை பிறப்பிடமாக கொண்ட ஜே.ஏ.கபலுலூன் ஆசிரியர் தனது 37வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

இவர்1988ஆம் ஆண்டு பஃபாரதி ச.ம.வி ஆங்கில ஆசிரியராக இணைந்த இவர் 1993ஆம் ஆண்டு பஃஅல் அதான் ம.வி இடமாற்றம் பெற்று வந்ததுடன் அதே வருடத்தில் ஹாலி எலை கணினி வள நிலையத்தில் வளவாளராக இணைந்து கொண்டார். பின்னர் நிலையத்தில் முகாமையாளராக 2014ஆம் ஆண்டு கடமையேற்று 2022 ஆண்டு வரை கடமையாற்றிய துடன் மீளவும் 2022இல் பஃஅல் அதான் ம.வியில் கணினி ஆசிரியராக 2025.12.15ஆம் திகதி ஓய்வுபெறும் வரை இப்பாடசாலையில் கடமையாற் றியதுடன் பாடசாலையின் கல்வி, முகாமைத்துவம் மற்றும் விளையாட் டுத்துறைகளுக்கு மகத்தான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

இவருடைய வழிகாட்டலில் பாடசாலை மாணவர்கள் கணினித் துறையில் பல தேசிய மட்ட விரு- துகளை பெற்றுக் கொண்டதுடன், இவர் பதுளையில் பிரபல கணினித் துறை வளவாளராகவும்,தே.க. நிறுவகத்தின் பதுளை மாவட்ட வளவாளராகவும் திகழ்வதுடன், 2004 முதல் 2006 வரை பதுளை வை.எம். எம்.ஏயின் செயலாளராகவும், பதுளை மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் உத்தரவுபெற்ற நடுவராகவும் பணியாற்றியபோது 2002 முதல் 2003 வரை அதன் செயலாளராகவும் 16வயதின் கீழ் இலங்கை ஹொக்கி அணியுடன் நடுவராக சிங்கப்பூருக்கு விஜயம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வாக்குறுதியை நிறைவேற்றி தனது கொடுப்பனவை அன்பளிப்புச் செய்த பிரதேச சபை உறுப்பினர்

(நூருல் ஹுதா உமர்)

பின்தங்கிய பிரதேசமாகக் காணப்படும் நாவிதன்வெளி பிரதேசத்தின் கல்வி முன்னேற்றம், பிரதேச அபிவிருத்தி மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகிய துறைகளில் அதீத அக்கறையுடன் செயல்பட்டு வரும் நளீர் பௌண்டஷன் தலைவரும், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினருமான எம்.ஏ. நளீர், தமக்கு பிரதேச சபை உறுப்பினராக கிடைத்த ஆறாம் மாதக் கொடுப்பனவையும் வாக்குறுதிக்கிணங்க மக்களுக்கே அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

அதன்படி, குளத்தடி ஐந்தாம் கிராமத்தில் வசித்து வரும் வசதி அற்ற ஒரு குடும்பத்திற்கு கொடுப்பனவை முழுமையாக அன்பளிப்புச் செய்துள்ளார்.

இதன் போது கருத்து வெளியிட்ட அவர்..

“தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய, எனக்கு கிடைக்கும் மாதாந்த கொடுப்பனவுகளை பொது மக்களுக்கே வழங்குவேன் என உறுதியளித்திருந்தேன். அந்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கிறேன். எனது பதவிக்காலம் முழுவதும் கிடைக்கும் சகல மாதக் கொடுப்பனவுகளும் தேவையுடைய மக்களுக்கே வழங்கப்படும்.

அத்தோடு நவிதன்வெளி பிரதேசத்தின் கல்வி முன்னேற்றம், அபிவிருத்தி மற்றும் சமூக நல்லிணக்கத்தை முன்னிறுத்தி, நளீர் பௌண்டஷன் தலைவர் மற்றும் இலங்கை அடிப்படை உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளராக பல்வேறு சமூக சேவைகளில் ஈடுபட்டு வந்தேன். அதன் பயனாகவே, மக்கள் தாம் தொடர்ந்தும் வாக்களித்து வந்த அரசியல் கட்சிகளை புறக்கணித்து அதிக வாக்குகளுடன் என்னை தமது பிரதிநிதியாக பிரதேச சபைக்கு அனுப்பியுள்ளனர். நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினராக ஆசனத்தை சூடாக்காமல், மக்களின் குரலாக ஒலித்து வருகிறேன். மக்களுக்கு சேவை



யாற்றும் பணியை இடை நிறுத்தாமல் தொடர்வேன். அதன் ஒரு பகுதியாகவே மாதாந்த கொடுப்பனவுகளையும் தேவையுடைய மக்களுக்கே அன்பளிப்பாக வழங்கி வருகிறேன்.” என தெரிவித்தார்.

# முஸ்லிம் பாடசாலைகளுக்கான நேர மாற்றத்தினால் பல்வேறு சிரமங்கள்

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் பிரதமரிடம் எடுத்துரைப்பு

அரசாங்கத்தின் முஸ்லிம் பாடசாலைகளுக்கான நேர்மாற்றம் மாற்றபைபட வேண்டும் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் 2026ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கான நேர மாற்றம் காரணமாக மாணவர்கள் மற்றும் பாடசாலை ஆளணியின ருக்கு பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றமையை இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கம் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரினி அமரசூரியவிடம் எடுத்துக்காட்டியுள்ளது.

பதுளை, ஹட்டன், மொனராகலை, நுவரெலியா போன்ற கஷ்ட பிரதேசங்களிலிருந்து வரும் மாணவர்கள் மற்றும் ஆளணியினர் காலை 7.15முன்னர் வருவதிலும் 2.45பின்னர் வீடு திரும்புவதிலும் பல்வேறு சிரமங்கள் மற்றும் மன உளைச்சல்களுக்கு முகங்கொடுக்க நேரிடுவதுடன் பாடசாலை போக்குவரத்து சேவைகள் 7.30இற்கே ஏனைய பாடசாலை மாணவர்களுடன் வருவதும் 2.00மணிக்கு மீளவும் செல்வதும் மற்றுமொரு



பிரச்சினையாகும் எனவும் குறிப்பிட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுற்று நிருபங்களை அடிக்கடி மாற்றுவதை விடுத்து பிரச்சினைக்கு ஆகுமான தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுக்க பின்னிற்கப் போவதில்லை எனவும் அதன் பொதுச் செயலாளர் எம்.கே.எம்.நியார் தெரிவித்துள்ளார்.

# கம்பளை- மாரியாவத்த பெரிய பள்ளிவாயலுக்கு ரிஷாட் பதியுதீன் நிவாரண உதவி!





கண்டி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்கி வைக்கும் திட்டத்தில், கம்பளை- மாரியா வத்த பெரிய பள்ளிவாயலுக்கு நிவாரண உதவிகளை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் (17) வழங்கி வைத்தார்.

இதன் போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான அஷ்ரப் தாஹீர், தாஹீர் மரைக்கார், கண்டி மாவட்ட கட்சியின் அமைப்பாளர் அம்ஜத் ஹாஜியார், குருணாகல் மாநகர பிரதி நகர பிதா அஸார்டீன் மெய்னுடீன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் என பலரும் இதன் போது கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



அனுராதபுரம் மத்திய நுவரகம் பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட அழுத்கம பெல்லன்கடல குள மறுசீரமைப்பு பணிகளை (17) பார்வையிட்டார் அமைச்சர் வசந்த சமரசிங்க .

(படம்:எம்.ரீ.ஆரிப்)



# சிதைந்த நிலத்தில் மனிதம் விதைத்த நம்பிக்கை!

(வெள்ளம் - நவம்பர் 2025
கெலி ஓயா - கம்பளை)

வெள்ளத்திற்குப் பிறகு
கம்பளை - கெலி ஓயா,
உடைந்த வீடுகளாலும்
சிதைந்த வாழ்வுகளாலும்
ஒரு ஆழமான காயம் பதித்த
நிலமாக எம் முன் நின்றது.

வீடுகளிலும் வீதிகளிலும்
வெள்ளம் விட்டுச் சென்ற
குப்பைகூழங்கள்
அழிவின் சாட்சியாய்
பரவிக் கிடந்தன.

துக்கம், பயம், ஏக்கம்,
ஒவ்வொரு மூலையிலும்
வார்த்தையின்றி
மௌனமாக
நின்றுகொண்டிருந்தன.

அந்த நொடியில்தான் -
“அல்ஹம்துலில்லாஹ்“
மனங்களை மீட்டெடுக்கும்
மனிதர்கள் வந்தார்கள்.

நாட்டின் பல திசைகளிலிருந்து
வந்த இளைஞர்கள், அறிஞர்
பெருமக்கள்,
தன்னார்வலர்கள் -
இயக்க நிறமற்ற
தூய மனிதாபிமானத்துடன்
கரங்களை நீட்டினார்கள்.

அவர்களின் புன்னகை
ஒரு மருந்தாக இருந்தது.
அவர்களின் அருகாமை
ஒரு ஆறுதலாக மாறியது.
அவர்களின் நட்பொலி
நம்பிக்கையாக ஒலித்து,
எங்கள் இதயங்களில்
மீளெழுச்சியை விதைத்தது.

அவர்கள் அறிவுரை
சொல்ல வரவில்லை,
எங்கள் உடைந்த நிலத்தோடு
உடன் அமர வந்தார்கள்.
எங்கள் துயரத்தை
உடன் சுமக்க வந்தார்கள்.

மனிதாபிமானத்தின்
பேரலைபோல் வந்த அவர்கள் வந்த
நொடியிலிருந்து..
அழுகிப்போன இடங்களில்
அழகு மீண்டும்
முளைக்கத் தொடங்கியது.

அந்த வருகையில்தான்
சிதறிய எங்கள் மனங்கள்
சுகத்தை சுவாசித்தன -
குணமடையும் நம்பிக்கை
மெதுவாகத் துளிர்த்தது.

அவர்களின் வருகையும்
ஒன்றுபட்ட மனமும்
எங்களை மீண்டும் உயர்த்திய
தூண்களாக ஆனது.

அவர்கள் உருவாக்கிய
அன்பின் நிழலில்தான்
நாம் இன்று
மீண்டும் மலர்கிறோம்,
மீண்டும் பிரகாசிக்கிறோம்.

இருப்பிடங்களை மட்டுமல்ல,
இதயங்களையே மீண்டும்
கட்டமைக்கும் வலிமை
இந்த மனிதத்துவத்தில்தான்
இருந்தது.

ஒவ்வொரு பேரிடரிலும்
இஸ்லாமிய சகோதரத்துவம்
ரத்த உறவுகளையே..
மிஞ்சும் ஆழத்துடன்
நம்மை தாங்குகிறது என்பதை
எங்கள் சமூகம்
மீண்டும் நிரூபித்துள்ளது.

இழப்புகள்
எங்களை தாழ்த்த முயன்றாலும்,
அவர்களின் கருணை
எங்களை மீண்டும்
எழுந்து நிற்க வைத்தது.
நீர் மங்கச் செய்த இடங்களில்,
நம்பிக்கை
மீண்டும் மலர்கிறது.

விழும் தருணத்தில்
கைதூக்கி எழுப்பும் சமூகமாக,
பகிர்வதில் பஞ்சம் அறியா
இதயங்களாக,
அருளின் நிழலில்
ஒன்றாய் வாழும் மனிதர்களாக
நாம் இருப்பதால்..
”பேரிடர்” கூட
நம் கருணை பார்த்து
மௌனமாக வியக்கிறது.

இந்த சமூகத்தின் அங்கமாக
நம்மை ஆக்கிய
அல்லாஹ்வுக்கே
அனைத்துப் புகழும்.

நீர் எதை எடுத்துச் சென்றதோ,
அதைவிடப் பெரியதை
மனித உறவுகள்
வந்து வைத்துச் சென்றன.

அன்பும் ஆதரவும் நிறைந்த
அந்த நிழலில்,
அல்லாஹ் நமக்கு
வாழ்விலும், வளத்திலும்
முன்னேற்றம் தருவானாக.

வெள்ளத்தைத் தாண்டி,
நம்பிக்கையுடன் மீளெழும்
ஒவ்வொரு உயிரினதும்
நன்றியாக!

**[வெள்ளக் களத்தில் இருந்து]**



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

## அஸ்ஹர் அன்சார் எழுதும் தொடராக வெளிவரவுள்ள... “சிதைந்த நிலத்தில் மனிதம் விதைத்த நம்பிக்கை!”

வெள்ளத்தால் சிதைந்த நிலத்தின் நடுவிலும், மனித மனங்களில் யாரும் கவனிக்காத கதைகள் முளைக்கலாம்.”

யாருக்கும் தெரியாமல் உருவான அனுபவங்கள், நினைவுகள், மனித உறவுகள், உணர்வுகள் உருவாகலாம்.

அவை பெரிய மேடைகளில் பேசப்படாதவை,

அதிகாரப்பூர்வ அறிக்கைகளில் இடம்பெறாதவை,

ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் ஆழமாக பதிந்தவை. அவற்றில் சில “சிதைந்த நிலத்தில் முளைத்த கதைகளாக இங்கு எழுப்படுகிறது.

நவம்பர் 2025-ஆம் ஆண்டு, கம்பளை, கெலி ஓயா பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம்

பல மறைமுகமான பாதிப்புகளையும், வெளியில் சொல்ல இயலாத அதிர்ச்சியான உணர்வுகளையும், அதே நேரத்தில் சில அழகான மனித அனுபவங்களையும் உருவாக்கிச் சென்றது.

வெளிப்படையாகக் காணப்படும் உடைமைகளின் சேதங்களை எளிதில் கண்களால் அளவிட முடியும். ஆனால் அந்தக் கண்களுக்கு தென்படும் அழிவுகளின் அடுக்குகளுக்குள், வெளிப்படையாகத் தெரியாத பல மறைந்த அனுபவங்கள் புதைந்திருக்கின்றன. அவை ஒவ்வொரு மனிதராலும், ஒவ்வொரு மனநிலையாலும் வேறுபட்ட முறையில் அனுபவிக்கப்பட்டிருக்கலாம்.

அந்த அனுபவங்களில் சில கசப்பும் கவலையும் நிறைந்தவையாக இருக்கலாம். சில வேதனையின் நடுவிலும் சிரிப்பையும் சுவையையும் தாங்கியதாக இருக்கலாம்.

அவை தனிமனிதர்களின் மனப்புத்தகங்களில் எழுதப்பட்ட மௌனங்களாகவும், மலைச் சரிவுகளில் யாருக்கும் தெரியாமல் புதைந்த உணர்வுகளாகவும் இருக்கலாம்.

அந்த சொல்லப்படாத அனுபவங்களையும், புதைந்த மௌனங்களையும் புரிந்துகொள்ளும் நோக்கத்துடன்,

எழுத்தின் வழியாக, உதடுகள் உச்சரிக்க முடியாத உணர்வுகளை மனித மனங்களில் உணரவிடும் முயற்சியாக, இந்தக் கட்டுரைத் தொடர் ஆரம்பிக்கப்படுகிறது.

## If You Hug Me, I Will Fall

உங்களை நிமிர வைத்த உதவியாக இருந்தால்?

வேகமாக ஓடும் உலகில்,

மெதுவாக குணமடையும் வாழ்க்கைகள் அதிகம்.

வெற்றி பெரும்பாலும் வெளிப்படையான சாதனைகளால் அளவிடப்படும் காலத்தில்,

அமைதியான மீட்பு கவனிக்கப்படாமல் போய்விடுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் பலரின் மனதில் இன்று ஒரு பரிச்சயமான கேள்வி எழுகிறது:

வாழ்க்கையின் கடினமான காலங்கள் உங்களை உடைக்க அல்ல -மீண்டும் நின்று கொள்ள கற்றுத் தருவதற்காகத்தானா?

இந்தக் கேள்வியே

இலங்கை எழுத்தாளர் ரிஹாஸூதீன் ராசிக் எழுதிய வரவிருக்கும் நினைவுக்குறிப்பு நூல் If You Hug Me, I Will Fall என்பதின் மையக் கருத்தாக உள்ளது.

இந்த நூல் வீரர்களைப் பற்றியதல்ல.

வலியை மிகைப்படுத்துவதுமில்லை. எளிய தீர்வுகளையும் வாக்குறுதி அளிப்பதில்லை.

பல தசாப்தங்களாக துன்பம், இழப்பு, மீட்பு ஆகியவற்றை அனுபவித்த சமூகங்கள் உள்ளார்ந்து அறிந்த ஒரு உண்மையை இது அமைதியாகச் சொல்கிறது:

வலிமை தரும் உதவிக்கும் மனித மரியாதையை மெதுவாகக் குறைக்கும் உதவிக்கும் ஒரு வேறுபாடு உள்ளது.

உடல் நலம் மீளும் காலத்தில் எழுதப்பட்ட இந்த நினைவுக்குறிப்பு, அன்புடன் வழங்கப்படும் உதவி கூட சமநிலையின்றி வழங்கப்படும்போது சுயாதீனத்தை பாதிக்க முடியும் என்பதை நிதானமாக விளக்குகிறது.

எழுத்தாளர் எழுதுகிறார்:

“நான் சுமக்கப்பட கற்றுக்கொள்ளவில்லை மீண்டும் நின்று கொள்ள கற்றுக்கொண்டேன்.”

இந்த வரிகள் பல குடும்பங்களுக்கும், காத்திருப்பை அறிந்த இளைஞர்களுக்கும், நாள்தோறும் போராடும் உழைக்கும் மக்களுக்கும் நெருக்கமான உணர்வை வெளிப்படுத்துகின்றன.

இந்த நூலின் தலைப்பே அந்த உண்மையைச் சுருக்கமாகச் சொல்கிறது:

மிகவும் இறுக்கமாகப் பிடித்தால்,

சமநிலை இழக்கப்படும்.

வடக்கு வாசகர்களுக்கு ஏன் இது முக்கியம்?

வடக்கில் பலரின் வாழ்க்கை தனிப்பட்ட முடிவுகளால் அல்ல -

சூழ்நிலைகளால் மாற்றப்பட்டது.

உதவியும் பாதுகாப்பும் ஒருவரின் மரியாதையை இழக்காமல் எவ்வாறு வழங்கலாம் என்பதை பல குடும்பங்கள் அனுபவத்தால் கற்றுள்ளன.

இந்த நூல், பொறுமையை செயலற்ற காத்திருப்பாக அல்ல - அமைதியான, தொடர்ச்சியான வலிமையாக காட்டுகிறது.

நவீன, காகிதமில்லா வாசிப்பு அனுபவம் If You Hug Me, I Will Fall காகிதமில்லா, டிஜிட்டல் நூலாக வெளியிடப்படுகிறது.

இது:

- கைப்பேசி, டேப்லெட், ஸ்மார்ட் டிவியில் வாசிக்க ஏற்றது
- பார்வை அல்லது வாசிப்பு சிரமங்கள் உள்ளவர்களுக்கும் அணுகக்கூடியது
- கண்களுக்கு சோர்வளிக்காத வகையில் வடிவமைக்கப்பட்டது

இதனுடன் இணைந்த சுளையணரனளை.உழஅ

ஒரு விளம்பரத் தளமாக அல்ல -

ஒரு வாசிப்பு அனுபவ தளமாக உருவாக்கப்படுகிறது.

ஒரு அமைதியான அழைப்பு

இந்தக் கதை

வெற்றியைப் பற்றி அல்ல.

சத்தத்தைப் பற்றி அல்ல.

இது

சமநிலை பற்றி.

மரியாதையை இழக்காமல்

மீண்டும் எழுவது பற்றி.

- வரவிருக்கும் ஆன்லைன் நூல் வெளியீட்டிற்கு வாசகர்கள் அழைக்கப்படுகிறார்கள்.
- விவரங்களுக்கு:

Rihazudin.r@gmail.com

சில கதைகள்

சத்தமாக பேசாது.

அவை - நிலைத்திருக்கும்.

# மள்வானை பூகொடையில் பாதிப்புற்றோருக்கு ஸஹரா நிதியத்தின் உதவிகள்






வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மள்வானை ,பூகொடை பகுதிகளுக்காக கலாநிதி அல்-ஹாஜ் பசூல் ஜிப்ரி அவர்களின் ஸஹரா நிதியத்தினால் வழங்கப்படவுள்ள Royal Happy Kitchen rikayiw பொருட்கள் கையளிக்கின்ற நிகழ்வுகள் மற்றும் பள்ளிவாசல் இமாம்களிக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வும் இன்று காலை மள்வானை முபாரக் மௌலானா தக்கியா பள்ளிவாசலில் இடம்பெற்றது.

மள்வானை நபவிய்யா இஸ்லாமிய இளைஞர் இயக்கத்தினருடன் இணைந்து ஸஹாரா நிதியத்தின் குழு உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் கலாநிதி அல்-ஹாஜ் முஹம்மத் பசூல் ஜிப்ரி , அவருடைய புதல்வர் அல்-ஹாபிழ் பாஸில் ஜிப்ரி ,பாரளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புள்ளா ,மற்றும் இமாம்கள் ,உலமாக்கள், தக்கியா மத்திச்சம்மார்கள், பள்ளிவாசல்களின் நிருவாக சபை உறுப்பினர்கள் ஊர்பிரமுகர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது ஒவ்வொரு பகுதிகள் சார்பாக கலந்துகொண்ட பிரதிநிதிகளிடம் அவர்களின் பகுதிகளுக்கான சமையலறை தொகுதிகள் கையளிக்கப்பட்ட தோடு, மள்வானையில் உள்ள 21 பள்ளிவாசல்கள் மற்றும் பூகொடையை சேர்நத 2 பள்ளி வாசல்களின் இமாம்கள் , முஅத்தின்களுக்கான நிதியும் கையளிக்கப்பட்டது.

மேலும் முதல்தடவையாக ஒரு சபையில் உலமாக்கள் ஒன்று சேர்நதமை மிகவரவேற்பை பெற்றிருந்ததோடு உலமாக்களில் இருவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்காக உம்ரா செல்வதற்கான ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் கலாநிதி அல்-ஹாஜ் முஹம்மத் பசூல் ஜிப்ரி அவர்களது உரையின் போது தெரிவித்தார்.

மேலும் எதிர்காலத்தில் வெல்லம்பிட்டிய பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள 50 குடும்பங்களுக்கான சமையலறைத் தொகுதிகளும்,மற்றும் பியகம பகுதியில் பாதிக்கப்பட்ட மாற்று மத சகோதரர்களுக்கான சமையலறைத் தொகுதிகளும் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமத்தியில் செவிலியர் பயிற்சி நெறி; சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)



வடமத்திய மாகாண சபையால் நடத்தப்பட்ட பராமரிப்பு உதவி செவிலியர் பயிற்சி பாடநெறிக்கான (Care Hitter ) சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாகாண சபை கேட்போர் கூடத்தில் மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் நடைபெற்றது.

வெளிநாடுகளில் முதியோர் பராமரிப்பு வேலைகளை இலக்காகக் கொண்டு 2022 ஆம் ஆண்டு மாகாண சபையால் இந்த பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை பயிற்சி பெற்றவர்களில் பெரும்பாலானோர் இப்போது ஐரோப்பிய நாடுகளில் தொழிலுக்கு சென்றுள்ளனர்.

இரண்டு மாத பயிற்சிக்குப் பின்னர் பயிற்சி பெற்றவர்களுக்கு சர்வதேச அளவில் அங்கீகாரிக்கப் பட்ட ஏழு 03 சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அந்தத் துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த அரச அதிகாரிகள் மற்றும் வளவாளர் களினால் பயிற்சிகள் வழங்கப்படுகின் றன.

பயிற்சி பெற்ற 65 பேர் ஆளுநரிடம் இருந்து சான்றிதழ்களைப் பெற்றனர். குறித்த பாடநெறி வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து மாகாண கூட்டுறவு அமைச்சின் சுகாதார விவகாரத் துறையின் கீழ் நடத்தப்படுகிறது. இதன் போது மாகாண பிரதான செயலாளர் ரஞ்சன ஜயசிங்க, மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் ஸ்கந்த குமார, ஆளுநரின் செயலாளர் நந்தன கலகொட , ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் சமரதுங்க ஹேரத் , இணைப்பு செயலாளர் ஆனந்த ரத்நாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கவிஞர் ரஷீத் எம். றியாழுக்கு “செந்தமிழ் வித்தகர்” விருது



கவிஞரும் பத்திரிகை யாளரும் தமிழ் எழுத்தணிக் கலைஞருமான ரஷீத் எம். றியாழ் “செந்தமிழ் வித்தகர்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கண்டியை ஆண்ட ஸ்ரீ விக்ரமராஜசிங்க மன்னனின் 7 வது தலைமுறை வாரிசு பேரனும் சமூக செயற்பாட்டாளருமான இந்தியா மதுரையைச் சேர்ந்த அசோக் ராஜாவினால் இந்த விருதும் சான்றிதழும் கவிஞர் ரஷீத் எம் றியாழுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

அண்மையில் ஹொரணையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு இந்திய மணிமகுடம் இதழின் ஆசிரியரும் புதிய வானம் ஊடக வலையமைப்பின். தலைவருமான மணி ஸ்ரீகாந்தன் தலைமை வகித்தார்.

கவிஞர் றியாழ் தினகரன் வாரஞ்சரியில் சுமார் 11வருடங்களாக “கவிதைப்பூங்கா” பகுதி பொறுப்பாசிரியராகவும், இலங்கை வானொலி மலையக சேவையில் சுமார் 5 வருட காலம் “வசந்த வாசல்” கவிதா நிகழ்ச்சி தயாரிப்பாளரா கவும் பங்களிப்பாற்றியவராவார்.

இந்திய தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இயங்கி வருகின்ற புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளை சார்பிலேயே இவருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்தியா தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்கள் கவிஞர்கள் கலைஞர்கள் உட்பட உள்நாட்டைச் சேர்ந்த கவிஞர்கள் கலைஞர்கள் சமூக சேவையாளர்கள் பலரும் கலந்து கொண்ட இவ்விழாவை புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் நிறுவனர் தனலட்சுமி மாதவன் நெறிப்படுத்தியிருந்தார்.

# கல்வி என்பது எமது வாழ்க்கையை வளப்படுத்தும் ஓர் ஊடகமே அன்றி, அது ஓர் ஆயுதம் அல்ல

**உளவளத்துறை ஆலோசகருமான முஸ்தபா அன்ஸார்**





கல்வி என்பது எமது வாழ்க்கையை வளப்படுத்தும் ஓர் ஊடகமே அன்றி, அது ஓர் ஆயுதம் அல்ல என முன்னாள் அதிபரும் கல்வியியலாளரும் உளவளத் துறை ஆலோசகருமான முஸ்தபா அன்ஸார் தெரிவித்தார்.

கஹட்டோவிட்டாவில் அமைந்துள்ள கல்விக்கும் அபிவிருத்திக்குமான அல் இமாம் ஷாபிஈ நிலையம் வசதி குறைந்த மாணவர்களுக்கு வருடாந்தம் கற்றல் உபகரண பொதிகளை விநியோகம் செய்து வருகின்றது.

இந்தவகையில் இவ்வருடத்துக்கான கற்றல் உபகரண பொதிகள் விநியோக நிகழ்வு கடந்த 24ஆம் திகதி ஷாபிஈ நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், கமுரகல்ல சிங்கள மகா வித்தியாலயம், ஊராபொல மத்திய கல்லூரி கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம், கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயம், அல் இமாம் ஷாபிஈ நிலைய மாலைநேர அல் குர்ஆன் பாடசாலை, என்பவற்றின் 100 மாணவர்கள் பயன்பெற்றனர்.

அல் இமாம் ஷாபிஈ நிலையத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரும் பஹன மீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் எம்.எஸ்.அப்துல் முஜீப் கபூரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட பேச்சாளராக கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் இவ்வருடம் அரச பாடசாலைகளில் அறிமுகம் செய்துள்ள புதிய கல்விச் சீர்திருத்தம் மாணவர்களின் நடத்தை மாற்றத்தில் முக்கிய கவனம் செலுத்துகின்றது. வெறுமனே தகவல்களை நிரப்பிக் கொள்வதும், பரீட்சையில் சித்தியடைவதும் மட்டுமல்ல கல்வி என்பது. மாறாக இதனுடன் சேர்ந்து ஆன்மீகமும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இதற்கான அடிப்படையை புதிய கல்விச் சீர்திருத்தம் உள்வாங்கியுள்ளது. பிள்ளைகள் என்ன படித்தார்கள் என்று கேட்கும் யுகம் மாறி, ஏன் ஒரு விடயத்தைப் படித்தார்கள். அதனால் அவர்களது வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம் என்ன என்று கேட்கும் யுகம் உருவாக வேண்டும். அதற்கான ஒரு பாதையை இப்புதிய கல்விச் சீர்திருத்தம் அமைக்கும் என்று தான் நம்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அல்பத்ரியா மகா வித்தியாலய அதிபர் எம்.ஏ.எம்.எம். அஸ்மீர், முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலய அதிபர் எம்.எம்.ஸர்ஜூன், ஓய்வு நிலை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.முஹம்மத், கஹட்டோ விட்டாவின் கிராமசேவை உத்தியோக த்தர்கள், சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றார்கள் ஆகியோர் கலந்து பயனடைந்த இந் நிகழ்வில், கஹட்டோவிட்டாவின் அயல் கிராமத்தைச் சேர்ந்த சகோதர சிங்கள சமூகத்தின் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சீனன்கோட்டை முத்துக்கள் வட்ஸ் அப் குழுமத்தினால் மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கி வைப்பு





(பேருவளை பீ.எம் முக்தார்)

பேருவளை சீனங்கோட்டை முத்துக்கள் வட்ஸ் அப் குழுமம் சீனன் கோட்டை பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெரும் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு தொடர்ந்து 3 வருடங்களாக பாதணிகளை வழங்கி வருகிறது.

சீனன் கோட்டை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி மற்றும் சீனன் கோட்டை ஆரம்பப் பாடசாலை ஆகிய 3 கல்வி கூடங்களில் கற்கும் குறைந்த வருமானம் பெறும் மாணவர் களுக்கு இவ்வாறு பாதணிகளை வழங்கி பணி செய்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இறந்த வேளைத்திட்டத்தின் கீழ் நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரிக்கு பாதணித் தொகுதி கையளிக்கும் நிகழ்வு குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாசீம் தலைமையில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் ஹாஜியாணி பஹீமா பாயிஸிடம் இந்த பாதணித் தொகுதி கையளிக்கப்பட்டதோடு நிகழ்வில் குழுமத்தின் அங்கத்தினர்களான சீனன் கோட்டை ஸகாத் கமிடி தலைவர் பாகிர் ஹாஜியார், முஹம்மத் சாலி ஹாஜியார், எம். எப். எம் ஹாரூன் ஹாஜியார், ரொசான், பாயிஸ், சிரேஷ்ட ஊடகவியளாலர் அல் ஹாஜ் பீ எம் முக்தார் மற்றும் அஸ்வர் வபா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

குறைந்த வருமானம் பெறும் மாணவர்களை தேடி இவ்வாறு பாதணிகள் தொடர்ந்து வழங்கி வரும் சீனன் கோட்டை முத்துக்கள் வட்ஸ் அப் குழுமத்தின் பணிகளை அதிபர் பஹீமா பாயிஸ் இங்கு பாராட்டினார்.

# அனர்த்தங்கள்
## ஓர் இஸ்லாமியப் பார்வை



அஷ்ஷைக் பளீல் (நளீமி)

உலகில் வரலாறு நெடுகிலும் அல்லாஹ்வின் ஏற்பாட்டினால் பலவிதமான அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. வெள்ளம், மண் சரிவு, எரிமலைக் குமுறல், சுனாமி, சூறாவளி, நிலநடுக்கம், என அவை பல வகைப்படும்.

எனவே, உலகத்திற்கு இவை ஒன்றும் புதியவை அல்ல. சிறிய அளவில் சில அர்த்தங்கள் நடைபெற்று ஓரளவு பாதிப்புகள் இருப்பினும் மற்றும் சில அனர்த்தங்கள் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

1931 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சீனாவில் இடம் பெற்ற வெள்ளத்தினால் 4 மில்லியன் மக்களும் 1887 ஆம் ஆண்டு அதே நாட்டில் இடம் பெற்ற மற்றுமொரு வெள்ளத்தினால் 2 மில்லியன் பேரும் 1970 கிழக்கு பாகிஸ்தானில் (தற்போதுள்ள பங்காளாதேஸ்) இடம்பெற்ற சூறாவளியினால் 5 லட்சம் பேரும் 2010ல் ஹெய்ட்டியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் 3 லட்சத்து 16 ஆயிரம் பேரும் உயிரிழந்தனர்.இது உயிர்ச் சேதம் மட்டுமே பொருட்சேதம் பற்றிய புள்ளி விபரங்கள் வேறாக உள்ளன.

அனர்த்தங்களை இரண்டு வகையாக பாகுபடுத்தலாம். மனிதன் தனது மோசமான நடத்தைகளால் அல்லது கவனயீனத்தால் தேடிக்கொள்ளும் அனர்த்தங்கள் முதல் வகையாகும். யுத்தங்கள், இனக்கலவரங்கள், வன்முறைகள் என்பன இதற்கு சில உதாரணங்களாகும். அல்லாஹ்வின் ஏற்பாட்டால் மனிதனுக்குத் தெரியாத காரணங்களால் ஏற்படும் அனர்த்தங்களில் சூறாவளி, சுனாமி, நிலநடுக்கம், வெள்ளம் போன்றன அடங்கும்.

மொத்தத்தில் இந்த இரண்டு வகை அர்த்தங்களும் இடம்பெறும் என அல்லாஹ்வின் பதிவில் ஏற்கனவே இருந்திருக்கும் என்பதை முஸ்லிம்களாகிய நாம் உறுதியாக நம்புகின்றோம்.அது "களா கத்ர்' மீதான நம்பிக்கையாகும்.

"பூமியிலோ, அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் - அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்/ஹல் மஹ்ஃபூள்) ஏட்டில் இல்லாமலில்லை நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும்" என்று கூறும் அல்லாஹ்:

இந்த நம்பிக்கையினால் ஏற்படக்கூடிய பலனை பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

"உங்களை விட்டுத் தவறிப்போன ஒன்றின் மீது நீங்கள் துக்கப்படாமல் இருக்கவும்,அவன் உங்களுக்கு அளித்தவற்றின் மீது நீங்கள் (அதிகம்) மகிழாதிருக்கவும் (இதனை உங்களுக்கு அல்லாஹ் அறிவிக்கிறான்) கர்வமுடையவர்கள், தற்பெருமை உடையவர்கள் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை."(57:22,23)

தப்பிப்போன எதற்காகவும் கவலைப்படாமலும் கிடைத்த எதனை நினைத்தும் அகம்பாவம் கொள்ளாமல் இருப்பதற்கும் அதாவது சமநிலையான மனோநிலைக்கும் இந்த நம்பிக்கை துணை நிற்கிறது என்ற கருத்தை அவன் குறிப்பிடுகிறான்.

எல்லாம் அல்லாஹ்வின் ஏற்பாடுகள் ஏலவே எழுதப்பட்டவை. அல்லாஹ் எல்லாவற்றையும் திட்டமிட்டு இயக்குகிறான்.அவன் விதித்தது தவறாமல் நடக்கும் என்ற "களா கத்ர்" நம்பிக்கை நிம்மதியைத் தரும். அவனது தீர்மானங்களுக்கான காரணங்களை அவனே மிகவும் அறிந்தவன்.

ஆனால், மனிதனாக தேடிக்கொள்ளும் அனர்த்தங்களுக்கு மனிதன் தான் பொறுப்பு என்றால் அல்லாஹ் ஏற்படுத்தும் அனர்த்தங்களுக்கு காரணங்கள் எவை என்பதுதான் இங்குள்ள மிக முக்கியமான கேள்வியாகும்.

இறைவனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களுக்கு நாஸ்திகவாதிகள் இறைவனை குறை கூறுவார்கள். ஆனால், முஸ்லிம்களாகிய நாம் இதுவிடயமாக கடுகளவேணும் அல்லாஹ்வை குறை கூறமாட்டோம். காரணம் அவனது ஏற்பாட்டிற்கு பல காரணங்கள் இருக்க முடியும்.

அல்குர்ஆன், அல் ஹதீஸ் ஆகிய இரண்டையும் நோக்குகின்ற பொழுது அந்த நிகழ்வுகளுக்கு பின்வரும் காரணங்கள் இருப்பதை அறிய முடிகிறது:-

அனர்த்தங்களுக்கான பின்னணிகள்

1. இறைவனது இருப்புக்கு ஆதாரம் (ஆயாத்-அத்தாட்சிகள்)

புறநடையான, வழமைக்குப் புறம்பான, எதிர்பாராத விதமான, அதிர்ச்சியான சம்பவங்களுக்கு அல்லாஹ் 'அத்தாட்சிகள்' என்று பெயரிட்டுள்ளான். அவற்றை அவன் ஏற்படுத்துவதன் மூலம் தனது இருப்பை நினைவூட்டி, அவன் பால் மக்கள் திரும்ப வேண்டும் என எதிர்பார்ர்க்கிறான்."(மக்களை) அச்சமூட்டி எச்சரிப்பதற்காவே அன்றி நாம் (இத்தகைய) அத்தாட்சிகளை அனுப்புவதில்லை."(அல்குர்ஆன் - 17:59)

இதற்கு சிறந்த உதாரணமாக,சந்திர சூரிய கிரகணங்களைக் குறிப்பிட முடியும். நபி(ஸல்) அவர்களது காலத்தில் அன்னாரது மகன் இப்ராஹிம் வஃபாத்தான சந்தர்ப்பத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. அப்போது அவர்கள் "சூரியன் மற்றும் சந்திரன் என்பன அல்லாஹ்வின் இரண்டு அத்தாட்சிகளாகும். ஒருவருடைய மரணத்திற்காகவோ அல்லது ஒருவரின் பிறப்பிற்காகவோ அவை மறைவதில்லை. அவற்றை (நீங்கள் மறையக்) கண்டால் அல்லாஹ்விடம் இரைஞ்சுங்கள், தக்பீர் சொல்லுங்கள், தொழுகையில் ஈடுபடுங்கள், தருமம் செய்யுங்கள்" என்று கூறினார்கள். (ஸஹீ/ஹல் புகாரி -1044)

இவ்வாறான நிகழ்வுகளின் பொழுது மனிதன் தன்னைப் பற்றியும் இந்த பிரபஞ்ச நிகழ்வுகளை ஏற்படுத்துபவனைப் பற்றியும் சிந்திக்க ஆரம்பிக்கின்றான். அந்த நிகழ்வுகள் அவனை பாதிக்கலாம் அல்லது பாதிக்காமல் இருக்கலாம்.எனவே புறநடையான இது போன்றன நிகழ்வுகள் அல்லாஹ்வின் அத்தாட்சிகள் என்பதை மக்கள் உணர்ந்து அவன்பால் திரும்புவதற்கு தூ ண்டுவதற்காக அல்லாஹ்வால் ஏற்படுத்தப்படுகின்றன.

2. மனித அறிவுக்கான சவால்

அறிவியலின் உச்சத்தில் தான் இருப்பதாக நினைக்கும் மனிதன் இந்த அனர்த்தங்கள் வரும் நேரத்தை முன்கூட்டியே அறிந்திருந்தானா? அவற்றுக்கு தயாராக முடிந்ததா? அல்லது அவற்றைத் தடுக்க முடியுமா? போன்ற கேள்விகளைத் தொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

உலகிலேயே விஞ்ஞானத்திலும் தொழிநுற்பத்திலும் மிக உச்சத்தில் உள்ள அமெரிக்காவில் இடபெற்ற மாபெரும் அனர்த்தங்கள் அந்த நாட்டின் இயலாமைக்கு சான்றாகும்.

1918 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஸ்பானிஷ் காய்ச்சலால் அமெரிக்காவில் 6,75,000 பேர் உயிரிழந்தனர். 2020 டிசம்பர் நிலவரப்படி, அமெரிக்காவில் மொத்தமாக 1.6 கோடிக்கும் (16 மில்லியன்) அதிகமான ஊழுஏஜனு-19 நோயாளிகள் பதிவாகியிருந்ததுடன், உலகிலேயே அதிகமான ஊழுஏஜனு-19 தொடர்புடைய மரணங்களும் அமெரிக்காவில்தான் ஏற்பட்டன.

1900 செப்டம்பர் 18 அன்று டெக்சாஸ் மாநிலத்தின் கல்வஸ்டன் நகரத்தை தாக்கிய வெப்பமண்டல சூறாவளி, அமெரிக்க வரலாற்றிலேயே மிக அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்திய இயற்கை பேரழிவாகும். இதில் சுமார் 12,000 பேர் உயிரிழந்ததாக மதிப்பிடப்படுகிறது.

2017 செப்டம்பரில், ஹரிகேன் மரியா என்ற சக்திவாய்ந்த புயல் அமெரிக்காவின் போர்ட்டோ ரிகோவை தாக்கியது. அதன் அழிவுகள் பல மாதங்கள் வரை தொடர்ந்தன. இதன் காரணமாக குறைந்தது 2,975 பேர் உயிரிழந்ததாக கணக்கிடப்பட்டுள்ளது் இந்த புயல், போர்ட்டோ ரிகோவில் மட்டும் 90 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சேதத்தையும், கரீபியன் பிராந்தியமெங்கும் 1.6 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சேதத்தையும் ஏற்படுத்தியது.

https://www.evergladesuniversity.edu/.../worst-disasters.../ மனிதன் தனது நவீன நாகரிக முன்னேற்றத்தால் தன்னை யாராலும் அடக்கமுடியாது எனக் கருதுகிறான், ஆனால், இத்தகைய பேரிடர்கள் நிகழும் போது இயலாமையில் தடுமாறுகிறான். அவன் பெருமையை விட்டு விட்டு, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் முன் பணிவுடன் தலைக்குனிய வேண்டும் தன்னை தெய்வீக நிலைக்கு உயர்த்தும் அகந்தையை விட்டு, தனது படைப்பாளியை மட்டுமே வணங்க வேண்டும். இந்த யதார்த்தத்தை அல்லாஹ் பின்வருமாறு விளக்குகிறான்:-

"இவ்வுலக வாழ்க்கைக்கு உதாரணம், நாம் வானத்திலிருந்து இறக்கிவைக்கும் மழை நீரைப் போன்றது (அதன் காரணமாக) மனிதர்களும் கால்நடைகளும் உண்ணக் கூடியவைகளிலிருந்து பூமியின் பயிர்கள் பல்வேறு வகைகளாகின்றன் முடிவில் பூமி (அந்த பயிர்கள் மூலம்) தன் அலங்காரத்தை பெற்று கவர்ச்சியடைந்த பொழுது அதன் சொந்தக்காரர்கள்: (கதிரை அறுவடை செய்து கொள்ளக்கூடிய) சக்தியுடையவர்கள் என்று தங்களை எண்ணிக் கொண்டிருந்தனர் அச்சமயம் இரவிலோ பகலிலோ அதற்கு நம் கட்டளை வந்து (அதை நாம் அழித்து விட்டோம்). அது முந்திய நாள் (அவ்விடத்தில்) இல்லாதது போன்று அறுக்கப்பட்டதாக அதை ஆக்கிவிட்டோம். இவ்வாறே நாம் சிந்தனை செய்யும் மக்களுக்கு (நம்) அத்தாட்சிகளை விவரிக்கின்றோம்." (10:24)

எனவே இந்த அனர்த்தங்கள் உலக வாழ்வின் நிலையற்ற தன்மை, மனித ஆற்றல்களது வரையறுத்த தன்மை என்பவற்றை உணர்த்துவதற்கான அரிய சந்தர்ப்பம்.

3. நிழலின் அருமை வெயிலுக்குப் போனால் தெரியும்

இத்தகைய அனர்த்தங்கள் அல்லாஹ் தந்துள்ள மகத்தான அருளை நாம் மறந்து விட்டோமோ அல்லது கவனிக்காமல் விட்டோமோ என்பதை நினைவூட்டுகின்றன. பூமியின் நிலைத்தன்மைக்கும் அமைதிக்கும் பழகிவிட்டதால் அதன் மதிப்பை உணராமல் போகிறோம்.

அல்லாஹ் கூறுகிறான்: "நாம் இப்பூமியை விரிப்பாக ஆக்கவில்லையா? இன்னும், மலைகளை முளைகளாக ஆக்கவில்லையா?"

"உங்களுடன் பூமி அசையாதிருப்பதற்காக அவன் அதன் மேல் உறுதியான மலைகளை நிறுத்தினான் இன்னும் நீங்கள் சரியான வழியை அறி(ந்து செல்) வதற்காக அவன் ஆறுகளையும் பாதைகளையும் (அமைத்தான்)."

"அல்லாஹ் தான் உங்களுக்கு பூமியை நிலையான வாசஸ்தலமாகவும், வானத்தை ஒரு கட்டிடமாகவும்."

"இந்தப் பூமியை வசிக்கத் தக்க இடமாக ஆக்கியவனும், அதனிடையே ஆறுகளை உண்டாக்கியவனும் அதற்காக (அதன் மீது அசையா) மலைகளை உண்டாக்கியவனும் இரு கடல்களுக்கிடையே தடுப்பை உண்டாக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? இல்லை! (எனினும்) அவர்களில் பெரும்பாலோர் அறியாதவர்களாக இருக்கின்றனர்." (நம்ல்: 61)

எனவே, மனிதர்கள் அல்லாஹ்வின் அருள்களை தொடர்ந்தும் அனுபவித்து வரும் போது அதன் அருமை பெருமை தெரியாமல் நன்றி செலுத்தாமல் வாழும் நிலை காணப்படும். அப்போது அந்த அருள்களுக்கு சொந்தக்காரன் அனர்தங்களின் மூலம் மக்களை உணர்ச்சிபெறச் செய்கிறான்.



(அடுத்த வாரம் தொடரும்...)

# கொழும்பு கம்பஹா மாவட்ட ஹாஜிகளுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு

**(ஏ.எஸ்.எம். ஜாவித்)**

2026 ஆம் ஆண்டில் புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற இருக்கும் ஹாஜிகளுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நாடளாவிய ரீதியில் நடாத்தி வருகின்றது. இந்த வகையில் கொழும்பு மற்றும் ஹம்பகா மாவட்டங்களில் இருந்து புனித ஹஜ் செல்ல இருக்கும் ஹாஜிகளுக்கான ஹஜ் விழிப்புணர்வு செயலமர்வு கடந்த 25ஆம் திகதி கொழும்பு மருதானை எல்பில்ஸ்டன் மண்டபத்தில் இலங்கை ஹஜ் குழுத் தலைவர் றியாஸ் மிஹ்லார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ஹஜ் தொடர்பான மார்க்க ரீதியிலான விளக்கத்தை அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் பிரதிநிதி அஷ் ஷெய்க் மௌலவி முக்சித் காதர் முஹைதீன் வழங்கினார், 2026 ஆம் ஆண்டுக்கான ஹஜ் ஏற்பாடுகள் தொடர்பான விளக்கத்தினை இலங்கை ஹஜ் குழுத் தலைவர் றியாஸ் மிஹ்லாரும், ஹஜ் செல்ல இருக்கும் ஹாஜிகளின் மருத்துவ ஆலோசனை தொடர்பான விளக்கத்தை வைத்தியர் சிஹானும், மினா மற்றும் அறபா போன்ற இடங்களில் ஹாஜிகளுக்கான ஏற்பாடுகள் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக திணைக்களத்தின் பிரதம கணக்காளர் எஸ்.எல்.எம். நிப்ராசும் வழங்கினர்.

விழிப்புணர்வு கருத்தரங்கின் ஏற்பாட்டை ஹஜ் பிரிவின் பொறுப்பாளர் கே.ஏ.சப்ரி மற்றும் அஷ் ஷெய்க் கியாசும் மேற் கொண்டிருந்தனர்.

நிகழ்ச்சித் தொகுப்பையும் நன்றியுரையையும் திணைக்களத்தின் வக்பு பிரிவு பொறுப்பாளர் ஏ.எஸ்.எம். ஜாவித் வழங்கினார்.

இதன்போது விசேட துஆவை அஷ் ஷெய்க் மௌலவி சல்மான் வழங்கினார்.









# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் துஆ பிரார்த்தனை

**(இஸட்.ஏ.றஹ்மான் - ஒலுவில் விசேட செய்தியாளர்)**

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் முன்னாள் செயலாளர் ஜே.எம்.ஹனிபா திடீர் சுகயீனமுற்று சம்மாந்துறை வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதையடுத்து அவர் விரைவில் நலன் பெற வேண்டி அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் ஏற்பாடு செய்த துஆ பிரார்த்தனை அதன் தலைவர் மீரா இஸ்ஸதீன் அவர்களின் தலைமையில் மாவடிப்பள்ளி ஜும்ஆ பள்ளிவாசலில் புதன் (24.12.2025 ) அன்று பிற்பகல் 5.30 மணியளவில் இடம்பெற்றது. இதில் அமைப்பின் அங்கத்தவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.





# இரு தங்கப்பதக்கம் வென்ற எம்.எல்.எம்.சப்ராஸ், பயிற்றுவிப்பாளர் ஜி.எம்.அஸ்மிர் ஆகியோருக்கு விருது

**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

2024, 2025 தேசிய மட்ட விளையாட்டுபோட்டியில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு வர்ண விருது வழங்கிக்கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (2025.12.23) திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுனர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கி வரும் ஓரியன்ட் பிட்னஸ் சென்றர் (Orient Fitness Centre) சார்பாக ஆண் கட்டழகர் போட்டியில் இரு ஆண்டுகள் தொடர்ச்சியாக தங்கப்பதக்கம் வென்ற எம்.எல்.எம். சப்ராஸ் அவரது பயிற்றுவிப்பாளர் ஜி.எம்.அஸ்மிர் ஆகியோர் விருது மற்றும் பணப்பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விருதினைப் பெற்றமைக்காக முதலில் இறைவனுக்கும் விருதினைப்பெற்ற எம்.எல்.எம். சப்ராஸ் அவரது பயிற்றுவிப்பாளர் ஜி.எம்.அஸ்மிர் ஆகியோருக்கும் முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை முன்னாள் பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில், தற்போதைய பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக், முன்னாள் விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.இர்ஷாத் அலி, விளையாட்டு உத்தியோகத்தர் கே.சங்கீதா ஆகியோருக்கும் ஓரியன்ட் பிட்னஸ் சென்றர் (Orient Fitness Centre) நிலையம் சார்பாக அதன பணிப்பாளர் மௌலவி ஏ.ஆர்.எம்.நவாஸ் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றார்.












அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான கம்பளை மற்றும் கிண்ணியா பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு ஜம் இய்யத்துச் ஷபாப் நிறுவனத்தினால் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. கிண்ணியாவில் பாதிக்கப்பட்டோருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலாளர் அப்துல் கனி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பெர்ணான்டோ, ஜம் இய்யத்துச் ஷபாப் பணிப்பாளர் மௌலவி எம்.எஸ்.எம்.தாஸீம், பிரதிப் பணிப்பாளர் ஏ.ஜே.எம்.வாரித் ஆகியோர் பங்கேற்றிருப்பதைப் படங்களில் காணலாம்.

# இலங்கையின் சிறந்த ஆளுமைகளை கௌரவிக்கும் சோசியல் டிவி விருது விழா-2025



**(ஏ.எச்.எம். ஹாரீஸ்)**

இலங்கையின் பல்வேறு துறைகளில் தடம் பதித்த 55 சிறந்த ஆளுமைகளை கௌரவித்து விருது வழங்கும் விழா, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் டிசம்பர் 13 திகதி சோசியல் டிவி ஊடக வலையமைப்பின் ஸ்தாபக பணிப்பாளர் என்.எம்.சிறாஜ் தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சிந்தக அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக 24 படைப்பிரிவின் தலைமையக இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கே.டபிள்யூ. ஜயவீர , விஷேட அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் இலங்கையை சேர்ந்த ஊடகம், இலக்கியம், தொழில் முயற்ச்சி போன்ற பல் துறை ஆளுமைகள் 55 பேர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், கிழக்கு கேடயத்தின் தலைவர் எஸ்.எம்.சபீஸ், சம்மாந்துறை TOP STYLE நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.ஐ.எம். பிரோஸ் மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான எஸ்.எல்.எம். பஹ்மி, ஏ.எச். காலித், ஏ.சி.எம். நயீம், ஏ.எல். ஹாத்திக் இப்ராஹிம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பெருந்திரளான ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கத்தார் வாழ் கல்முனைக்கான வளைகுடா அமையத்தினால் அனர்த்த நிவாரண பணிமனைக்கு நிதியுதவி!



**( எம்.என். எம். அப்ராஸ்)**

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக, கத்தார் வாழ் கல்முனைக்கான வளைகுடா அமையத்தினால் சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து ஒரு பகுதியாக நான்கு இலட்சத்து பதின் ஐந்தாயிரம் ரூபாய் பணம் கல்முனை அனைத்துப் பள்ளி வாசல்கள் மற்றும் பொது நிறுவனங்கள் சம்மேளனத்திடம் சனிக்கிழமை (20) கல்முனை பெரிய பள்ளிவாசல் காரியாலயத்தில் வைத்து இவ்வமைப்பினது ஆரம்ப கால உறுப்பினர்கள் மற்றும் தொலைதூர அங்கத்தவர்களினால் கையளிக்கப்பட்டது.

மேலும் இதேவேளை கல்முனை யங் வேர்ட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பினருடன் சேர்ந்து சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட கண்டி மாவட்டம் கெலிஓயா பிரதேசத்தினை சுத்தம் செய்வதற்கு தேவையான நிதிப்பங்களிப்பினை செய்தமையும் அதே போன்று கத்தாரில் வசிக்கும் இலங்கை சகோதரர்களின் அமைப்பாக செயற்பட்டுவருகின்ற FSMAQ அமைப்பினுடைய மனிதாபிமான நீண்டகால திட்டங்களுக்கு உதவ முன்வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

## இளம் டிஜிட்டல் ஊடகவியலாளர் விருதை வென்ற முஹம்மட் ஹாரீஸ்



இலங்கையின் பல்வேறு துறைகளில் சாதித்துக் கொண்டிருக்கும் 55 சிறந்த ஆளுமைகளை கௌரவித்து விருது வழங்கும் விழா இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

சோசியல் டிவி ஊடக வலையமைப்பின் ஸ்தாபக பணிப்பாளர் என்.எம்.சிறாஜ் தலைமையிலும் அதன் செயலாளர் ஏ.ஆர். எம்.மஜீடின் ஒருங்கமைப்பிலும் இடம் பெற்ற இவ்விழாவில் "சிறந்த இளம் டிஜிட்டல் ஊடகவியலாளர்" விருதை அம்பாறை மாவட்ட சமுர்த்தி புலனாய்வு விசாரணை அதிகாரியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உறுப்பினரும், உதயம் பத்திரிகையின் இணையாசிரியருமான ஏ.எச். முஹம்மட் ஹாரீஸ் பெற்றுக் கொண்டார்.

இவருக்கான விருதினை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதியுமான கலாநிதி மஜீட் இதன்போது வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சிந்தக அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக 24 படைப் பிரிவின் தலைமையக இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கே.டபிள்யூ. ஜயவீர , விஷேட அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## மாளிகாவத்தை தேசிய வை.எம்.எம்.ஏ பேரவையின் புதிய தலைவராக எம்.எம். முஹம்மட் தெரிவு





மாளிகாவத்தை தேசிய வை.எம்.எம்.ஏ பேரவையின் 67ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் மற்றும் மாநாடு அண்மையில் கொழும்பு, மாளிகாவத்தையில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டின் போது பேரவையின் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. இதன்போது, மாளிகாவத்தை தேசிய வை.எம்.எம்.ஏ பேரவையின் தேசிய தலைவராக, தற்போதைய தலைவர் அல்ஹாஜ் எம்.எம். முஹம்மட் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

தலைவர் பதவிக்காக போட்டியிட விருந்த எம். ரம்சி போட்டியிலிருந்து விலகிக்கொண்டதை அடுத்து, எம்.எம். முஹம்மட் போட்டியின்றி ஏகமனதாக தலைவராகத் தெரிவானார்.

புதிய தேசிய பொதுச்செயலாளராக ஹஸ்மில் ஹம்டூன், தேசிய பொருளாளராக எம்.வி.எம். இம்தியாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, அமைப்பின் ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கான தேர்தலில் ஏழு பேர் போட்டியிட்டனர். இவர்களில் அதிக வாக்குகளைப் பெற்ற ஹஸ்மில் ஹம்டூன், எம்.எச்.எம். அஸ்வர், எஸ்.எஸ்.எப். நஜிமுத்தீன், ஏ.எச்.எம். கலீல், சப்ராஸ் சாலி ஆகிய ஐந்து பேரும் தெரிவாகினர்.

மேலும், இம்மாநாட்டின் போது பேரவையின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையும் சபையினரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கிய இலங்கை ஐ.எஸ்.ஆர்.சி

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**



இலங்கையின் ஐ.எஸ்.ஆர்.சி (ISRC Sri Lanka) புத்தளம் மாவட்டத்தில் சமீபத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய மனிதாபிமான நிவாரண உலர் உணவு பொருட்கள் வழங்கும் உலர் உணவு உதவிகளை வழங்கும் திட்டம் வியாழக்கிழமை (25) புத்தளத்தில் இடம்பெற்றது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொன்றும் ரூ. 12,000 மதிப்புள்ள 350 உலர் உணவுப் பொதிகள், புத்தளம் ஸாஹிரா தேசியக் கல்லூரி, காஸிமியா அரபுக் கல்லூரி மற்றும் கரைத்தீவு பெரிய பள்ளிவாசல் ஆகிய இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. பேரழிவுக்குப் பிந்தைய மீட்பு காலத்தில், பலவீனமான குடும்பங்கள் எதிர்கொள்ளும் உடனடி உணவுத் தேவைகளை பூர்த்தி செய்து, அவர்கள் சந்திக்கும் சிரமங்களை குறைப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இந்த மனிதாபிமான முயற்சிக்கு குவைத் நாட்டைச் சேர்ந்த தனவந்தர்கள் வழங்கிய நிதி ஆதரவுடன், புன்யான் தொண்டு நிறுவனம் மற்றும் தன்மியா தொண்டு நிறுவனம் ஆகியவை துணை நின்றன. இது இலங்கையில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் குவைத் நாட்டின் வலுவான சர்வதேச மனிதாபிமான ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது.

உலர் உணவுப் பொதிகள் விநியோகம், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள், சமூகத் தலைவர்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பில் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் வெளிப்படைத்தன்மை, சரியான பயனாளிகள் அடையாளம் காணுதல் மற்றும் தரைத்தள மட்டத்தில் திறமையான செயல்படுத்தல் உறுதி செய்யப்பட்டது.

ஐ.எஸ்.ஆர்.சி (ISRC Sri Lanka) பிரதிநிதிகள், பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மரியாதையை மீட்டெடுக்கவும், உடனடி நிவாரணத்தை வழங்கவும் நேரத்திற்குத் தக்க மனிதாபிமான உதவிகள் மிக முக்கியமானவை என்பதை வலியுறுத்தினர்.

மேலும், தொடர்ந்து வழங்கப்படும் உதவிகளுக்கும் மனிதாபிமான பணிகளுக்கான உறுதிப் பாட்டிற்கும் குவைத் தனவந்தர்கள் மற்றும் கூட்டாண்மை தொண்டு நிறுவனங்களுக்கு இலங்கை ஐ..எஸ்.ஆர்.சி (ISRC Srilanka) தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்தது.

எதிர்கால அவசர நிலைகளுக்கு திறம்பட பதிலளிக்கும் வகையில், பாதிப்புக்கு உள்ளாக்கப்படும் சமூகங்களுக்கு ஆதரவளிப்பதும், அரச நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தனவந்தர்களுடன் இணைந்து செயல்படும் கூட்டாண்மைகளை மேலும் வலுப்படுத்துவதும் தங்களின் உறுதியான இலக்காக இருப்பதாக இலங்கை ஐ.எஸ்.ஆர்.சி ( SRC Sri Lanka) உறுதி செய்துள்ளதுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

# வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய ஆதம்பாவா எம்.பி கள விஜயம்




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இறக்காமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆஸ்பத்திரி சேனை அண்டிய பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், அவர்களுடைய நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அழிவுகள் பற்றி ஆராய அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்தி குழுத் தலைவரும், இலங்கை அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா அவர்கள் விவசாயிகளின் அழைப்பின் பேரில் (20) சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டு விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது, நீர்ப்பாசன திணைக்கள தலைமை பொறியியலாளர்கள், திணைக்கள உயரதிகாரிகள், பிரஜா சக்தி தவிசாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் ரோஹித அமரதாச கல்வி நிர்வாக சேவையிலிருந்து ஓய்வு



(எம்.கே.எம். நியார்)

1991 ஆம் வருடம் ஆசிரியராக மிகவும் கஷ்டப் பிரதேச பாடசாலையான பஃகந்தகெபு உல்பத வித்தியாலயத்தில் கடமையேற்ற இவர் மெதஓய, பெதியாகொட போன்ற பாடசாலைகளில் கடமையாற்றி 2007 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்தார்.

அதனைத் தொடர்ந்து ரிதிமாலியத்த கோட்ட கல்விப் பணிப்பாளராகவும், மஹியங்கனை வலய மேலதிக கல்விப் பணிப்பாளராகவும், மாகாண கல்வித் திணைக்களத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும் வெலிமடை வலய கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றிய இவர் 2023 ஆம் ஆண்டு முதல் ஓய்வு பெறும் வரை ஊவா மாகாண கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

அதிபர், ஆசிரியர்களுடன் மனிதநேயமிக்கவராக மிக நெருக்கமான உறவை பேணி வந்த இவரின் ஓய்வு நிலை, சிறப்பாக அமைய இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கம் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

# ஆசிய பரா விளையாட்டு போட்டியில்

## வெண்கலம் வென்ற ஹெம்மாதகம யூனுஸ் இஷாம்

(பாரா தாஹீர்)

இம்முறை 35வது ஆசிய நாடுகளைச் சேர்ந்த, போட்டியாளர்கள் பங்கேற்ற ஆசிய பரா விளையாட்டு போட்டியில் இலங்கை சார்பில் பங்குபற்றிய ஹெம்மாதகம தும்புளுவாவயைச் சேர்ந்த யூனுஸ் இஷாம் வெண்கல பதக்கத்தை வென்று இலங்கை நாட்டுக்கு புகழ் சேர்த்துள்ளார்.

சூப்பர் லைட் விளையாட்டு கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட இவர் 1நிமிடம் 1.95 வினாடிகளில் ஓட்டத்தை நிறைவு செய்ததன் மூலம் மூன்றாம் இடத்தை சுவீகரித்து வெண்கல பதக்கத்தை பெற்று கொண்டார்.

தும்புளுவாவ வரலாற்றில் சர்வதேச போட்டியில் பதக்கம் வென்ற இவரை வாகன பவனியில் ஊரார் வரவேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# திகாமடுல்ல மீடியா போரத்தின் புது வருட ஒன்று கூடலும் கௌரவிப்பும்

திகாமடுல்ல மீடியா போரத்தின் புதுவருட ஒன்று கூடலும், கௌரவிப்பும், ரீசேட் வழங்கும் நிகழ்வும் ஜனவரி மாதம் இடம் பெறவுள்ளதாக போரத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எப்.றிபாஸ் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மீடியா போரத்தின் மூத்த ஊடகவியலாளர்கள், வைத்திய துறையின் உயர் அதிகாரிகள், துறைசார் தலைவர்கள் என பலர் அமைப்பினால் கௌரவிக்கப் படவுள்ளதுடன் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது உயிரிழந்தவர்களுக்கான து ஆப் பிரார்த்தனைகளும் இடம் பெறவுள்ளதாக போரத்தின் செயலாளர் ஏ.ஜீ.எம்.ஹனீபா தெரிவித்துள்ளார்.

# ஆர் ஜே மீடியா ஊடக வலையமைப்பின், கிரியேட்டிவ் எக்ஸலென்ஸ் விருது வழங்கல் விழா

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

"முயற்சிக்கு என்றும் முதலிடம்" என்ற நாமத்தை மையமாகக் கொண்டு, நாடளாவிய ரீதியில் பல்வேறுபட்ட சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கும் ஆர் ஜே மீடியா ஊடக வலையமைப்பின், "கிரியேட்டிவ் எக்ஸலென்ஸ் விருது வழங்கல் விழா" கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் ஆர் ஜே மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் வானொலி அறிவிப்பாளருமாகிய எ.எம். இன்சாப் தலைமையில் (22) இடம்பெற்றது.





இந்நிகழ்வில் பிரதம அதிதியாக, ஹாஷிம் உமர் பவுண்டேஷனின் பணிப்பாளர் புரவலர் ஹாஷிம் உமர் கலந்து சிறப்பித்ததுடன், கௌரவ அதிதிகளாக, சம்மாந்துறை பிரதேச செயலக கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தரும், பயிற்றுவிப்பாளருமான றஸ்மி மூஸா, சிரேஷ்ட உளவியல் ஆலோசகரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான அஸ்மியாஸ் ஷஹீத், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வை.எம். நிம்ஸாத், ராம் குணா அழகுசாதன மையத்தின் பணிப்பாளர் குணரத்னம் ஹரிஷந்த், சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் புலனாய்வு அலுவலர் ஜிப்ரியா இப்ராஹிம் நியூஸ்பார் தலைமை ஆசிரியரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஸமீஹா ஸபீர், ஹாஷிம் உமர் / பவுண்டேஷனின் செயலாளர் மர்யம் ஹாஷிம் உமர், உளவியலாளரும், விரிவுரையாளருமான ஆயிஷா பானு ஹஸன், குமாரி முல்ல முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் ரைஸா ரஸ்ஸாக், வசந்தம் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் எம். கவிதா பாரதி, இலங்கை ஷரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் நிகழ்ச்சித் தொகுப்பாளர் என். தீபதர்ஷினி, ஆகியோர் மற்றும் இன்னும் பல சிறப்பு அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

இதில், சுய தொழிலை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும், சிறந்த மருதாணி கலைஞர், சிறந்த கேக் வடிவமைப்பாளர், இளம் பெண்கள் சாதனை, சிறந்த ஆரி வடிவமைப்பாளர், சிறந்த ஆடை வடிவமைப்பாளர், சிறந்த ரெஸின் கலைஞர் மற்றும் சிறந்த எம்ராய்டரி வடிவமைப்பாளர் என, இவ்வாறான ஏழு பிரிவுகளில் சாதனை படைத்த பெண்களுக்கான கிரியேட்டிவ் எக்ஸலென்ஸ் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டமை சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில், அனைத்து மாவட்டங்களையும் மையப்படுத்தியதாக பல்வேறுபட்ட சாதனையாளர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# புதிய நிர்வாக சபை தெரிவு




(பாரா தாஹீர் )

அரநாயக்க வில்பொல ஜும்ஆ பள்ளி வாசலின் நடப்பாண்டுக்கான நிர்வாகத் சபை தெரிவு, அண்மையில் வில்பொல ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது.

தலைவராக எம். யூ.பர்ஸான் முகம்மட், செயலாளராக எம்.எச். எம். அஜ்மஹான், பொருளாளராக எம். ஜே. எம். ஹாரிஸ், உப தலைவர்களாக எம். இஸட் எம். மஃபூப், எம். கே.எம். அனஸ் ஆசிரியர், உப செயலாளராக எம்.ஐ.அப்ரார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

பகுதி தலைவர்களாக எம்.எஸ்.எஸ். அஹமட், எம்.வை.எம்.வஸீர், எஸ். யூ.எம்.ஹிப்பதுல்லாஹ்,எம்.என். எம்.நாஸிர் மௌலவி,எம். எம். எம். லாபிர், எம். யூ.எம். இர்ஷாட், எம். எச். எம். நாஸிர், எம். எச். எம். நபாஸ், எம். எஸ். எம். ஸாஜித்,எம். ஜே. எம். இம்ரான்,எம். ஏ.எம். பயாஸ்,எம். எம். எம். சப்ராஸ், எம். ஏ.எம். அனஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு தங்களுக்குரிய நியமனக்கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

# சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தகவல்களை கவனத்தில் கொள்ள வேண்டாம்

## ஜீவன் தொண்டமான்

காலத்தின் தேவைக்கேற்ப ஸ்தாபன கட்டமைப்பில் சில மாற்றங்களை செய்ய வேண்டியது அவசியமாகும். இதை தவறான புரிதலுடன் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தகவல்களை கவனத்தில் கொள்ள வேண்டியதில்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் ஊடக அறிக்கையினூடாக இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்..

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காக எமது முன்னோர்களின் தியாகங்களினால் கட்டமைக்கப்பட்ட ஸ்தாபனமாகும். இதன் பொதுச் செயலாளர் என்ற வகையில் என்னுடைய பொறுப்புகளில் இருந்து விலகுவது என்னுடைய நோக்கமல்ல. காலத்தின் தேவைக் கேற்ப ஸ்தாபன கட்டமைப்பில் சில மாற்றங்களை செய்ய வேண்டியது அவசியமாகும். இதை தவறான புரிதலுடன் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தகவல்களை கவனத்தில் கொள்ள வேண்டியதில்லை. எமது ஸ்தாபனத்தை ஜனநாயக முறையில் மேலும் வலுப்படுத்துவதே நோக்கமாகும். இதன் அடிப்படையில் மூன்று மாதங்களுக்குள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கூட்டப்பட்டு தேவையான மாற்றங்கள் குறித்து தீர்மானிக்கப்படும். இதுபற்றி தற்போது கட்சியின் உறுப்பினர்ளுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றது. வெகு விரைவில் இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியிடப்படும். இதன்மூலம் கட்சியின் செயற்பாட்டு வேகத்தையும் மக்கள் சேவையின் தரத்தையும் அதிகரிப்பதோடு "சமூகத்திற்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படும் போது, ஸ்தாபனம் உறுதியுடன் முன்னேற்றப் பாதையில் பயணிக்கும்." என



ஜீவன் தொண்டமான் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஒட்டமாவடி பிரதேச சபையின் பஜ்ஜெட் நிறைவேற்றம்





**(எச்.எம்.எம். பர்ஸான்)**

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் எம்.எம்.எம். ஹலால்தீன் செவ்வாய்க்கிழமை (23) உத்தியோகபூர்வமாக 2026 ஆம் ஆண்டுக்கின (பஜ்ஜெட்) வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்தார்.

இதன்போது, பஜ்ஜெட் தொடர்பான ஆலோசனைகள், விவாதங்கள் மற்றும் வாக்கெடுப்பு நடவடிக்கைகள் சபை அமர்வில் இடம்பெற்றன.

19 பேர் கொண்ட சபை உறுப்பினர்களில் குறித்த அமர்வுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் சமூகமளிக்காத நிலையில், 18 பேர் சமூகமளித்திருந்தனர்.

பஜ்ஜெட் தொடர்பான வாக்கெடுப்பில் 11 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்ட நிலையில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 5 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி தவிசாளர் சமர்ப்பித்த வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக ஐக்கிய தேசிய கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, சுயேச்சைக் குழு ஆகிய கட்சிகளின் தலா ஒவ்வொரு உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர்.

இவ் வாக்கெடுப்பின் போது தேசிய மக்கள் சக்தியின் இரண்டு உறுப்பினர்களும் நடுநிலை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# CED யின் ஆய்வறிக்கை மேல் மாகாண ஆளுனரிடம் கையளிப்பு



**( பீ.எம்.முக்தார்)**

கல்வி அபிவிருத்திக்கான நிறுவனத்தால் முன்னெடுக்கப் பட்ட, களுத்துறை மற்றும் இரத்தினபுரியைச் சேர்ந்த இளம் ஆர்வலர்கள் குழுவால் நடத்தப் பட்ட "இலங்கையில் கல்வித் துறையில் இன மற்றும் அடையாள அடிப்படையிலான பாகுபாடு" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட ஆய்வின் இறுதி ஆய்வறிக்கை, அதன் ஆய்வாளர் என்.எம். நஸ்ரான் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப் இடம் (22) கையளித்தார்.

இந்த ஆய்வறிக்கையில், இனம், மொழி, சாதி மற்றும் பாலினம் உள்ளிட்ட பல்வேறு அடையாளங்கள் காரணமாக கலவன் பாடசாலை மற்றும் மத ரீதியிலான பாடசாலைகளினுள் இடம்பெறும் பாகுபாடுகள் மற்றும் துன்புறுத்தல் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேருவளை அப்ரார் கல்வி நிலைய புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு







**(பீ.எம் முக்தார்)**

பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளில் கல்வி கற்பதில் திறமை காட்டிய மாணவ, மாணவிகளுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு பேருவளை மருதானை மனாரா பீச் வரவேற்பு மண்டபத்தில் அமைப்பின் தலைவரும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பொருலாளருமான கலாநிதி அஸ்வர் அஸாஹிம் தலைமையில் நடபெற்றது.

பேருவளை பகுதியைச் சேர்ந்த சிங்கள முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி பயிலும் 70 மாணவர்கள் புலமைப்பரிசில் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டனர்.

கல்வி நிலைய ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், நிகழ்வில் உதவி பெறும் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் பங்குபற்றினர்.

# இந்தியா - அமெரிக்கா உறவில் பதட்டம்.. ஆசியாவில் மாறும் சர்வதேச அரசியல்..

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)



ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினினின் இந்திய வருகை ஒரு திருவிழா போல கொண்டாடப்பட்டது. இதை உலகம் முழுவதும் உற்று நோக்கியது. இது ரஷ்ய-இந்திய உறவின் ஆழத்தையும் நிரூபித்தது. ரஷ்யாவிற்கும், இந்தியாவிற்கும் இடையிலான நட்புறவு புதியதல்ல. இது பல ஆண்டுகளாக பழமையானது. இது புடினின் முதல் இந்திய வருகை அல்ல. ஆனாலும், தற்போதைய சூழ்நிலைகள் அவரது வருகையை சிறப்பானதாகக் கருதப்படுகிறது. குறிப்பாக அமெரிக்கா, ரஷ்யாவின் எண்ணெய் கொள்முதல் மீது கூடுதலாக 25 சதவீத வரியை விதித்துள்ளது. இந்த 25 சதவீத வரி ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. அதாவது இந்தியா தற்போது அமெரிக்காவின் அதிகபட்ச வரியான 50 சதவீதத்தை எதிர்கொள்கிறது. இப்போது, டிரம்ப் இந்தியா மீது வரிகளை விதிக்க மற்றொரு வாய்ப்பு உள்ளது. இந்த முறை, அவரது இலக்கு இந்தியாவின் விவசாயத் துறை. இந்திய அரிசி மீது வரிகளை விதிக்க டிரம்ப் அச்சுறுத்தியுள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்தியா அமெரிக்க சந்தையில் அரிசியைக் கொட்டக்கூடாது. குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டும் என்றும், இந்தப் பிரச்சினையை நான் நிவர்த்தி செய்வேன் என்றும் கூறியுள்ளார்.

வரிகளை விதிப்பது இந்தப் பிரச்சினையை எளிதில் தீர்க்கும் என்று டிரம்ப் எச்சரித்தார். நேற்று, அமெரிக்க அதிபரின் அதிகாரப்பூர்வ இல்லம் மற்றும் அலுவலகமான வெள்ளை மாளிகையில், விவசாயம் மற்றும் விவசாயத் துறைகளின் பிரதிநிதிகள், நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட், வேளாண்மை அமைச்சர் ப்ரூக் ரோலின்ஸ் உள்ளிட்ட அவரது அமைச்சரவையின் முக்கியஸ்தர்களுடன் டிரம்ப் ஒரு வட்டமேசைக் கூட்டத்தை நடத்தினார்.

இந்தியாவைப் பற்றி சொல்லுங்கள். இந்தியா ஏன் இதைச் செய்ய அனுமதிக்கப்படுகிறது? அவர்கள் வரிகளை செலுத்த வேண்டும். அவர்களுக்கு அரிசியில் தள்ளுபடி கிடைக்குமா?" எனக் கேட்டார். இதற்கு, பதிலளித்த பெசன்ட், "இல்லை, நாங்கள் தற்போது அவர்களுடன் வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். உலக வர்த்தக அமைப்பில் இந்தியாவுக்கு எதிரான வழக்கு நிலுவையில் இருக்கிறது"" என கென்னடி டிரம்பிடம் தெரிவித்தார். ""இதை மிக எளிதாக தீர்க்க முடியும். சட்டவிரோதமாக பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகள் மீது வரிகளை விதிப்பதன் மூலம் இது மிக விரைவாக தீர்க்கப்படும். உங்கள் பிரச்சினை ஒரு நாளில் தீர்க்கப்படும், எனவே உச்ச நீதிமன்றத்தில் வழக்கை நாம் வெல்ல வேண்டும்" "" என்று டிரம்ப் கூறினார்.

இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் தகவல்படி, இந்தியா உலகின் மிகப்பெரிய அரிசி உற்பத்தியாளர். உலக சந்தையில் 28 சதவீத பங்கைக் கொண்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டில் உலகளாவிய ஏற்றுமதியில் 30.3 சதவீத பங்கைக் கொண்டு, இது சிறந்த ஏற்றுமதியாளராகவும் உள்ளது. இந்தியா உலகளவில் ஏற்றுமதி செய்யும் அரிசி வகைகளில், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற சந்தைகளில் சோனா மசூரி விரும்பப்படுகிறது. டிரம்ப் இந்தியா மீது 50 சதவீத வரியை விதித்துள்ளார். இது உலகிலேயே மிக உயர்ந்தது. இதில் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் கொள்முதல் மீது 25 சதவீத வரியும் அடங்கும்.

அமெரிக்க அமைப்புகள் மாஸ்கோவுடன் உறவுகளைக் குறைக்குமாறு இந்தியாவை வலியுறுத்தி வருகின்றன. ஆனால் இப்படிப்பட்ட நிலையில்தான் புடின் உடன் மோடி நெருக்கமாகி உள்ளார். ஊஜயு போன்ற அமெரிக்க உளவு நிறுவனங்கள் இந்த வருகையை தீவிரமாக் கவனிப்பதாகப் பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்தியாவின் நம்பிக்கையைப் பெறுபவர்கள் உலக அரசியலில் பெரும் செல்வாக்குச் செலுத்துவார்கள் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர். உலகின் வேகமாக வளரும் பொருளாதாரமான இந்தியா, ஆசியாவின் அதிகாரச் சமநிலையின் மையத்தில் உள்ளது. இந்தியாவை இழப்பது வாஷிங்டனுக்கு ஒரு பெரிய பின்னடைவாக அமையும். அதுவும் ரஷ்யா - இந்தியா ஒன்றாக இணைவது அமெரிக்காவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும்.

டெல்லியில் புடினுக்குக் கிடைத்த உற்சாகமான வரவேற்பு, ரஷ்யாவை உலக அரங்கில் தனிமைப்படுத்த முயன்றவர்களுக்கு ஒரு சவாலாகவே பார்க்கப்படுகிறது. அமெரிக்கா இந்தியாவை அழுத்தம் கொடுக்க முயல்கிறது. கட்டுப்படுத்த முயல்கிறது. ஆனால் ரஷ்யா அதன் ஒத்துழைப்பு, தொழில்நுட்பம் மற்றும் மரியாதையின் மூலம் இந்தியாவின் மனதை வெல்கிறது. இந்தியாவுடன் நெருக்கமாக இருக்கிறது. இது அமெரிக்காவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ள நிலையில்தான் அமெரிக்க வெளியுறவுத் துறையின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் அலிசன் ஹூக்கர் அவசர அவசரமாக அஇந்தியாவிற்கு வருகை புரியும் வகையில் அமெரிக்கா இந்திய இடையே மிகப் பெரிய அளவில் ஆன உறவு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அதிபர் புதினின் இந்த பயணத்தின்போது, இந்தியாவும் ரஷ்யாவும் கூடுதல் எஸ்-400 ஏவுகணை அமைப்புகள் மற்றும் சுகோய்-57 போர் விமானங்கள் தொடர்பான பாதுகாப்பு ஒப்பந்தங்களில் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லலாம்.

அத்துடன், ரஷ்யாவின் கச்சா எண்ணெய் மீதான அமெரிக்கத் தடைகளுக்கு மத்தியில் எரிசக்தித் துறையில் ஒத்துழைப்பு குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படலாம்.

அதிபர் புதினின் இந்தப் பயணம், ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் அணுசக்தி, தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகத் துறைகளில் தங்கள் இருதரப்பு உறவுகளை சீராய்வு செய்ய ஒரு வாய்ப்பை அளிக்கும்.

ரஷ்யாவின் அரசுத் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் யூரி உஷாகோவ் சர்வதேசப் பிரச்னைகள் குறித்து ஆழமான விவாதம் நடத்துவதற்கான தேவையிருக்கிறது என்றும் அதிபரின் பயணம் "மகத்தானதாகவும், வெற்றிகரமானதாகவும்" இருக்கும் என்றும் கூறினார்.

யுக்ரேன் போருக்கு மத்தியில் ரஷ்யாவை தனிமைப்படுத்த மேற்கத்திய நாடுகள் கொடுத்த அழுத்தத்தை இந்தியா தவிர்த்து வருகிறது.அதிபர் டிரம்ப் இந்தியா மீது அதிக வரிகளையும் தடைகளையும் விதித்துள்ளார், இது அமெரிக்கா மற்றும் இந்தியாவின் உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.புதினின் இந்தப் பயணம் இந்தியா மற்றும் ரஷ்யாவின் பாதுகாப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் என்றும், உலகளாவிய பாதுகாப்பிற்கு ஒரு புதிய வடிவம் கொடுக்கும் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்தியா மற்றும் ரஷ்யா இடையே நீண்டகாலமாகவே நல்லுறவு இருந்து வரும் சூழலில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இந்தியா வந்திருந்தது உலக அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்பட்டது. இதற்கிடையே, அமெரிக்க அதிபர் டிரம்ப் எடுத்த இந்தியாவுக்கு 50 சதவீத வரி, பாகிஸ்தானுடன் நெருக்கம் உள்ளிட்ட சில வெளியுறவுத் துறை முடிவுகள், இந்தியாவுடனான உறவில் பின்னடைவை ஏற்படுத்தியதாகவும், இது ரஷ்யாவுடன் இந்தியா மேலும் நெருக்கமாவதற்கு வழிவகுத்ததாகவும் தற்போது அமெரிக்காவிலேயே விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதுகுறித்து அமெரிக்கன் என்டர்பிரைஸ் இன்ஸ்டிடியூட்டின் மூத்த ஆய்வாளரும், முன்னாள் பென்டகன் அதிகாரியுமான மைக்கேல் ரூபின் அளித்த பேட்டி தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதில் அவர், "இந்தியா மற்றும் ரஷ்யாவை ஒன்றாக இணைத்ததற்காக டிரம்பிற்கு நோபல் பரிசே வழங்கலாம் அந்தளவிற்கு அவரது திறமையின்மை வெளிப்பட்டுள்ளது. டிரம்பின் ஆட்சிக்காலத்தில் பாகிஸ்தான் மற்றும் துருக்கி போன்ற நாடுகளின் புகழ்ச்சிக்கு மயங்கி அவர் எடுத்த முடிவுகள், இந்தியாவுடனான அமெரிக்க உறவைச் சீர்குலைத்துவிட்டது. ரஷ்யாவிடமிருந்து இந்தியா எண்ணெய் வாங்குவதை அமெரிக்கா விமர்சிப்பது நியாயமற்றது இந்தியத் தலைவர்கள் தங்கள் நாட்டு மக்களின் நலனுக்கே முன்னுரிமை அளிப்பார்கள். மலிவு விலையில் மாற்று ஏற்பாடுகளைச் செய்து தராமல், இந்தியாவைக் குறை கூறுவதை அமெரிக்கா நிறுத்திக்கொள்ள வேண்டும். டிரம்பின் முடிவால் அமெரிக்காவுக்குத்தான் இழப்பு" என்றும் மைக்கேல் ரூபின் ஆவேசமாகத் தெரிவித்தார்.

## - பிரதமர் மோடியிடம் டிரம்ப் மன்னிப்பு கேட்க வேண்டும்: அமெரிக்க பாடகி ஆவேசம்

இந்தியாவுக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததற்காக பிரதமர் மோடியிடம், டிரம்ப் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பாடகி மேரி மில்பென் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில்," பிரதமர் மோடி புவி அரசியலின் மையப்புள்ளியில் இருக்கிறார். உலக அரசியலில் பிரதமர் மோடி மிகவும் முக்கியமான மற்றும் அதிக செல்வாக்குமிக்க தலைவராக திகழ்கிறார். அதை யாராலும் மறுக்க முடியாது. இந்தியாவுக்கு எதிரான அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் அவரது குழுவினரின் சமீபத்திய போக்கு மிகவும் கொடுமையானது. பிரதமர் மோடியை அதிபர் டிரம்ப் அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுக்க வேண்டும். பிரதமர் மோடியிடம் மன்னிப்பு கேட்டு, இருநாடுகளுக்கு இடையேயான உறவை மீண்டும் சரிசெய்ய வேண்டும்" என்றார்.

## - டிரம்பிற்கு பாகிஸ்தான் லஞ்சம் தந்ததா?

பென்டகனின் முன்னாள் அதிகாரி மைக்கேல் ரூபின் மேலும் கூறுகையில்,"அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை தலைகீழாக மாற்றிய டிரம்பின் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க குடிமக்கள் திகைத்துப் போயுள்ளனர். டிரம்பை எது தூண்டுகிறது என்று பலர் கேள்வி எழுப்புகின்றனர். ஒருவேளை அது பாகிஸ்தானியர்களின் முகஸ்துதியாக இருக்கலாம். பாகிஸ்தானியர்கள் அல்லது துருக்கி மற்றும் கத்தாரில் உள்ள அவர்களின் ஆதரவாளர்கள் டிரம்பிற்கு லஞ்சம் கொடுத்திருக்கலாம். இது அமெரிக்காவை பல தசாப்தங்களாக ஒரு பெரிய சிக்கலில் சிக்க வைக்கும் ஒரு பேரழிவு தரும் லஞ்சம்.

அமெரிக்கர்கள் புரிந்து கொள்ளாதது என்னவென்றால், இந்தியர்கள் இந்திய நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பிரதமர் மோடியைத் தேர்ந்தெடுத்தனர். இந்தியா அதிக மக்கள் தொகை கொண்ட நாடு. அது விரைவில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறப் போகிறது. இந்தியாவுக்கு வரிவிதிக்கும் போது நாம் பாசாங்குத்தனமாக நடந்து கொள்கிறோம். அதற்கு பதில் அமெரிக்கா இந்தியாவுக்கு மலிவான விலையில் எரிபொருளை வழங்க வேண்டும். அதற்கு நம்மிடம் பதில் இல்லையென்றால், நமது சிறந்த அணுகுமுறை வெறுமனே வாயை மூடிக்கொள்வதே ஆகும் " என்று விளாசினார்.

இந்தியா ரஷ்யா இடையேயான உறவு மிகவும் முக்கியமான ஒன்றாக அமெரிக்கா கருதுகிறது. ஏனெனில் சர்வதேச நாடுகள் மத்தியில் ரஷ்யா அதன் கூட்டணி களை தனிமைப்படுத்த அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய விரும்பும் நிலையில் தான் இந்தியாவிற்கு 50 சதவீதம் வரியை விதித்தார். அதேநேரத்தில் இந்தியாவிற்கு செக் வைக்கும் நிலையில் பாகிஸ்தான் ராணுவ தலைமை மற்றும் ஜனாதிபதி ஆகியோரை அமெரிக்காவுக்கு அழைத்து இந்தியாவிற்கு ஷாக் கொடுக்க அமெரிக்கா முயற்சி செய்து வந்தது. தற்போது நிலையில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ராணுவம் மற்றும் உள்நாட்டு கடன் விவகாரத்தில் அதிகம் அக்கறை எடுத்து தெற்காசிய நாடுகளின் மத்தியில் காலூன்ற முயலும் நிலையில் தான் இந்தியா ரஷ்ய வலுவான கூட்டணி அமெரிக்காவை எல்லா நிலைகளிலும் அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிற்கு அமெரிக்கா வர்த்தக தடை மற்றும் வரி விதிப்பு காரணமாக 60 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை மிகப் பெரிய அளவில் ஆன நஷ்டத்தை சந்தித்து வருகிறது. அமெரிக்காவால் உலகின் அதிகமான வரி விதிப்பிற்கு உள்ளான நாடாக இந்தியா மாறி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே ரஷ்யா இந்தியா அணு ஆயுத உற்பத்தி, கப்பல் போக்குவரத்து மேமமபடுத்துதல், ஏவுகணை தொழில்நுட்ப ஒப்பந்தங்கள், ராணுவம் சார்ந்த பல்வேறு தொழில் நுட்பங்கள் நிறைந்த ஒப்பந்தங்கள் அமெரிக்காவை மிகப்பெரிய அளவிலான பதட்டத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.அதே சமயம் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு மிகப் பெரிய அளவில் ஆன உதவிகளைச் செய்து வருகிற நிலையில் சீன, பாகிஸ்தான் உறவில் சிறிய தொய்வை உருவாக்கி ஆப்கானிஸ்தான் இடையேயான பதட்டம் என்கிற பல்வேறு கோணங்களில் அமெரிக்கா சிந்தித்து தான் இது போன்ற சூழலைப் உருவாக்கிட முனைகிறது என்பது தான் நாம் புரிந்து கொள்ள கூடிய தகவல்கள் என்பதே யதார்த்தமான நிலையாகும்.



அரபாத் பஹுர்தீன்






# இளையோர் ஆசியக் கிண்ணம் - 2025

## இந்தியாவை மண்டியிட வைத்து சம்பியன் மகுடம் சூடியது பாகிஸ்தான்

19 வயதுக்குட்பட்ட இளையோர் ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் சமீர் மின் ஹாஸின் அசத்தலான துடுப்பாட்டத்தின் மூலம் பலமிக்க இந்திய அணியை 189 ஓட்டங்களால் வீழ்த்திய பாகிஸ்தான் அணி முதல் முறையாக சம்பியன் மகுடத்தை கைப்பற்றி அசத்தியது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் கிரிக்கெட் மைதானங்களில் இடம்பெற்று வந்த 12 ஆசிய இளையோர் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இம்முறை 8 அணிகள் பங்கேற்றிருந்தன.

இதில் முதல் லீக் சுற்று முடிவில் குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பிடித்த அணிகள் நேரடியாக அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. அந்த வகையில் முதல் அரையிறுதியில் இலங்கை அணியை வீழ்த்திய இந்திய அணியும், 2ஆவது அரையிறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்ட பாகிஸ்தான் அணியும் தீர்மானிக்க இறுதிப் போட்டியில் மோதின.

அதற்கமைய ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்ற இறுதிப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனால் முதலில் துடுப்பாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 347 ஓட்டங்களை குவித்தது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக வலது கை ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சமீர் மின்ஹாஸ் 113 பந்துகளில் 172ஓட்டங்களை அதிரடியாக விளாசிக் கொடுத்தார். இந்திய அணி தரப்பில் தீபேஸ் ரவீந்திரன் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 348 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றியிலக்குடன் பதிலுக்கு துடுப்பாடிய இந்திய அணி 26.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து வெறும் 156 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 189 ஓட்டங்களால் தோல்விய டைந்தது. துடுப்பாட்டத்தில் தேவேந்திரன் 36 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன்மூலம் 12வது இளையோர் ஆசிய கிண்ணத்தை பாகிஸ்தான் இளையோர் அணி முதன் முறையாக சுவீகரித்து அசத்தியது. பந்துவீச்சில் அலி ராசா 4 விக்கெட்டுகளை அள்ளிக் சுருட்டினார்.

இறுதிப் போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் சமீர் மின்ஹாஸ் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

# மெஸ்ஸி இந்தியா வந்ததற்கான கொடுப்பனவு 89 கோடி இந்திய ரூபா



இந்தியாவுக்கு 3 நாள் பயணம் மேற் கொண்ட ஆர்ஜென்டினா கால்பந்து அணியின் தலைவரான லயோனல் மெஸ்ஸி கொல்கத்தா, ஐதராபாத், மும்பை, டெல்லியில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் உற்சாகமாக கலந்து கொண்டார்.

இதில் கொல்கத்தா சால்ட்லேக் ஸ்டேடியத்தில் நடந்த நிகழ்ச்சியில் மட்டும் பெரும் குளறுபடி ஏற்பட்டு விட்டது. ரூ.15 ஆயிரம் வரை கட்டணம் செலுத்தி ஸ்டேடியத்தில் குழுமியிருந்த ரசிகர்கள், 10-15 நிமிடங்களிலேயே மெஸ்ஸி அங்கிருந்து கிளம்பியதால் அவரை சரியாக பார்க்க முடியாத ஆத்திரத்தில் மைதானத்தில் இருந்த பொருட்களை அடித்து நொறுக்கி சூறையாடினர்.

பல மணிநேரம் போராடிய போலீசார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். நடந்த சம்பவத்துக்கு மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி மன்னிப்பு கேட்டார்.

நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த சதத்ரு தத்தாவை போலீசார் கைது செய்தனர். அவரிடம் சிறப்பு புலனாய்வு குழுவினர் நடத்திய விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மைதானத்துக்குள் மெஸ்ஸியை சூழ்ந்து கொண்டு அவரை தொடுவதும், கட்டியணைப்பதும் அவருக்கு அசவுகரியத்தை ஏற்படுத்தியது. மெஸ்ஸியின் வெளிநாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் முன்கூட்டியே எச்சரித்தும் அதையும் மீறி பலர் அவ்வாறு நடந்து கொண்டனர்.

மேலும் மைதானத்தில் 150 பேருக்கு மட்டுமே 'பாஸ்' வழங்கப்பட்ட நிலையில், செல்வாக்கு மிக்க நபரின் தலையீட்டால் அதை மூன்று மடங்கு உயர்த்த வேண்டியதாகி விட்டது. அதன் பிறகே பாதுகாப்பும் சீர்குலைந்து போனது. இதனால் தான் திட்டமிட்ட நேரத்திற்கு முன்பாகவே மெஸ்ஸி வெளியேறினார். இந்திய பயணத்துக்காக மெஸ்ஸிக்கு ரூ.89 கோடி வழங்கப்பட்டது. மேலும் ரூ.11 கோடி அரசுக்கு வரியாக செலுத்தப்பட்டது. இவற்றில் கணிசமான தொகை ஸ்பான்சர்ஷிப் மற்றும் டிக்கெட் கட்டணம் மூலம் வசூலிக்கப்பட்டது' என தத்தா போலீசாரிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் தத்தாவின் வங்கி கணக்கில் இருந்த ரூ.20 கோடி முடக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அவரிடம் விசாரணை நடந்து வருகிறது.

# யாழ்ப்பாணம் மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதானம் சட்டவிரோதமானது

### இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம்




யாழ்ப்பாணம் மண்டைதீவில் முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் விளையாட்டு வளாகத் திட்டம் சட்டவிரோதமானது எனவும், இது அத்தீவின் சூழலியல் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் (றுசீளு) எச்சரித்துள்ளது.

இத்திட்டம் அமையவுள்ள பகுதியில் கண்டல் தாவரங்கள், கடல் புற்கள், உப்பளங்கள் மற்றும் மண்டைதீவு வனச்சரகம் போன்ற முக்கியமான சூழலியல் மண்டலங்கள் இருப்பதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ சட்டத்தின் கீழ் தேவையான எவ்வித சட்டபூர்வ அனுமதிகளையும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் (ளுடுஊ) பெறவில்லை என அந்தச் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

மண்டைதீவு ஒரு இயற்கை வெள்ளத் தடுப்பு வலயமாகும். மழைக்காலங்களில் இப்பகுதி நீரில் மூழ்கும் வாய்ப்புள்ளதால், இங்கு பாரிய கட்டுமானங்களை மேற்கொள்வது நிதி விரயத்திற்கும் தொடர்ச்சியான பராமரிப்பு செலவுகளுக்கும் வழிவகுக்கும்.

அதிகாரிகளுக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ள குறித்த சங்கம், இது இலங்கையின் நிலையான அபிவிருத்திக் கொள்கைக்கு எதிரானது என்றும் கூறியுள்ளது.

"எங்கள் எதிர்ப்பு யாழ்ப்பாணத்தில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு எதிரானது அல்ல மாறாக, சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த மண்டைதீவில் இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கும், சுற்றுச்சூழல் சட்டங்கள் மீறப்படுவதற்கும் மட்டுமே" என இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.

இத்திட்டத்தை உடனடியாக நிறுத்தி இது குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# டெஸ்ட் சம்பியன்ஷ் - 2025-2027 முதல் இரு இடங்களில் ஆஸி மற்றும் நியூஸிலாந்து

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் 2025 - 2027 ஆம் ஆண்டிற்கான டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் அவுஸ்திரேலிய அணி முதலிடத்திலிருக்க , நியூசிலாந்து அணி 2ஆம் இடத்திற்கு முன்னேறியது.

இரு ஆண்டுகளை சேர்த்து இடம்பெற்று வரும் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப் பட்டியலில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் டெஸ்ட் சம்பியன்ஷ் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் மோதும்.




அதற்கமைய 2025- 2027 ஆம் ஆண்டுக்கான போட்டிகள் தற்சமயம் ஆரம்பித்துள்ளது.

அதற்கேற்ப 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் 3 போட்டிகள் தற்சமயம் நிறைவடை ந்திருக்க 3 போட்டிகளையும் வென்று தொடரை தன்வசமாக்கி யுள்ள அவுஸ்திரேலிய அணி மொத்தமாக 6 போட்டிகளில் பங்கேற்று 6 வெற்றிகளுடன் 72 புள்ளிகளைப் பெற்று 100 என்ற சராசரியுடன் முதலிடத்திலுள்ளது.

மேலும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என வெற்றி கொண்ட நியூசிலாந்து அணி 3 போட்டிகளில் 2 வெற்றி மற்றும் ஒரு சமநிலையுடன் 28 புள்ளிகளைப் பெற்று 77.78 என்ற வெற்றி சராசரியுடன் 3ஆம் இடத்திலிருந்து 2ஆம் இடத்திற்கு முன்னேறியது.




மேலும் 2ஆம் நிலையிலிருந்த தென்னாபிரிக்கா 3ஆம் இடத்திற்கு கீழிறங்கியுள்ளது. நான்காம் இடத்தில் இரு போட்டிகளில் ஒரு வெற்றி, ஒரு சமநிலையுடன் 16 புள்ளிகளைப் பெற்றுள்ள இலங்கை 4ஆம் இடத்தில் நீடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய இளைஞர் விளையாட்டு விழா 2025 சம்பியனானது கண்டி மாவட்டம்

தேசிய இளைஞர் விளையாட்டு விழா 2025 இன் நிறைவு விழா ஞாயிற்றுக்கிழமை (21 ஆம் திகதி) நடைபெற்றது. இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, இளைஞர் விவகார பிரதி அமைச்சர் தினிந்து சமன் ஹேன்னாயக்க மற்றும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன ஆகியோரின் தலைமையில் இவ்விழா இடம்பெற்றது.

26 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இளைஞர், யுவதிகள் இப்போட்டிகளில் பங்கேற்றனர். இதில் கண்டி மாவட்டம் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது. கம்பஹா மாவட்டம் இரண்டாம் இடத்தையும், கொழும்பு மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.